www.tamilarangam.net

# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 விடை 18 (01.06.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p



இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவன் வழிகாட்டுகின்றான்; இன்னும் ஏன் தயக்கம்!

## மட்டு. தரவைக்குளம் இராணுவ முகாம்

# தாக்கியழிப்பு

**ஒரு வார இடைவெளியில் புலிகளின் பாரிய தாக்குதல்**

**பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன**

**50 க்கும் அதிகமான படையினர் பலி**

**விமானங்கள் விரட்டியடிப்பு**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த, தரவைக்குளம் சிறீலங்கா இராணுவ முகாமை, 28.04.95 அன்று அதிகாலை இரண்டு மணியளவில், சுற்றி வளைத்த விடுதலைப் புலிகளின் அதிரடிப்படையணி, சொற்ப நேரத் தாக்குதலில் முகாமைத் தமது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர்.**

விசேட பயிற்சிபெற்ற நாநூறு படையினர், தாக்குதல் நடந்த வேளை முகாமில் இருந்தனர் எனவும், தாக்குதலில் 50க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், ஏராளமான படையினர் படுகாயம் அடைந்திருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு அஞ்சி இராணுவத்தினர், அருகில் உள்ள காடுகளுக்குள் ஓடி மறைந்து கொண்டனர். முகாமைக் கைப்பற்றி, விடுதலைப் புலிகள் நிலையெடுத்துக் கொண்டனர்.

### லெப்.கேர்ணல். வினோதன் வீர மரணம்

விடுதலைப் புலிகளின் லெப். கேர்ணல் வினோதன் உட்பட 16 புலிகள் இத்தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளனர்.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத்திட்டத்தை வெளியிட்டால் இன வன்முறை வெடிக்கும்

**- சந்திரிகா பேட்டி**

அரசின் தீர்வுத்திட்டம் தயாராகவுள்ளது. அதனைத் தற்போது வெளியிட்டால் இன வன்முறை வெடிக்கும் எனச் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். "விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதற்காக அரசினாற் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தைத் தற்போதைய சூழ்நிலையில் வெளியிட்டால் தென்னிலங்கையிலும் வேறு பல பகுதிகளிலும் இன வன்முறை ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனால் இப்போது அதை வெளியிட முடியாது. அதை வெளியிட இது உகந்த தருணம் அல்ல" எனவும் சந்திரிகா மேலும்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துலக நகரெங்கும் அணிதிரளும் தமிழர்கள்



சிறீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும், தமிழீழத் தேசிய விடுதலைக்காகப் போராடும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அனைத்துலக அங்கீகாரத்தைக் கோரியும் ஆனி 3 ஆம் திகதியிலிருந்து உலகெங்கும் தமிழர்கள் அணிதிரண்டு ஊர்வலங்களை நடாத்தவுள்ளனர்.

"சமாதானத் தீர்வையே விரும்புகின்றோம்" என வார்த்தைக்கு வார்த்தை பிரச்சாரம் செய்து வந்த சந்திரிகா

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)




தியாகி சிவகுமாரனின் 21 ஆவது நினைவுக் கட்டுரை உள்ளே...

## மணலாறில் மோதல்

28.5.95 அன்று தரவைக்குளம் இராணுவமுகாம் தாக்கியழிக்கப்பட்ட வேளையில் சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே மணலாற்றுக்காட்டுப் பகுதியிலும் கடும் மோதல் இடம்பெற்றது. இம் மோதலில் புலிகள் தரப்பில் 6 வேங்கைகள் வீரச்சாவெய்தினர். இராணுவ தரப்பிலான சேத விபரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறியப்படவில்லை.

## முழு அளவிலான போர்

**சந்திரிகாவின் தொலைக்காட்சிப் போர்ப் பிரகடனம்**

'விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்கான ஆட்பலமும், ஆயுதப்பலமும் எம்மிடம் உண்டு. எமது படையினர் போரைத் தொடருவார்கள். விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகள் இறந்துவிட்டன. அவர்களுடன் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டிய எந்தவித

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் புலிகள் அதிரடித் தாக்குதல்

**27 இராணுவத்தினர் பலி; 2 சலாடின் ரக கவச வாகனங்கள் தகர்ப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரைப் பகுதியில் 22.5.95 திங்கள் அன்று சிறீலங்காப் படையினர் மீது, விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 27 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், பல படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. மேலும், 'சலாடின்' ரகத்தைச் சேர்ந்த இரு கவசவாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் மூன்று விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

2ஆம் லெப். கனகரத்தினம் கருணாகரன்
2ஆம். லெப். கந்தசாமி கோமகன்
வீரவேங்கை குலத்துங்கன்

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர். தாயகவிடுதலைக்காகத் தம்மினிய உயிர்களை ஈகம் செய்த இம் மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

இத்தாக்குதல் பற்றிய செய்தியைப் பல சர்வதேச செய்தித் தாபனங்களும் அறிவித்துள்ளன. சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளுக்கெதிராகப் போரை முன்னெடுத்துச் செல்வது பற்றித்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் விமானங்கள், விமானிகளை இந்தியாவிடம் பெற சிறீலங்கா முயற்சி !

அண்மையில் சிறீலங்கா, 2 போர் விமானங்களைப் புலிகளிடம் இழந்ததைத் தொடர்ந்து, இந்தியாவிடமிருந்து குண்டுவீச்சு விமானங்களையும் விமானிகளையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகக் கொழும்பு வாரச்செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் முப்படையினரையும் வழிநடத்தும் முகமாக, இரு புதிய நடவடிக்கைப் பிரிவுகள் அமையவுள்ளன. இவை கொழும்பிலும் அனுராதபுரத்திலும் இயங்கும். அமெரிக்க இராணுவ நிபுணர்களின் ஆலோசனைப்படியே மேற்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்போருக்கு இறக்கை முளைத்துவிட்டது!

தமிழீழம் ஒருவித மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றது. ஆண், பெண், இளைஞர், வயோதிபர் என்ற பேதமில்லாமல் எல்லோரும், தத்தமது குடும்பங்களில் நடக்கும் கொண்டாட்டங்களின்போது மகிழ்ச்சியுடன் காணப்படுவதுபோல, மலர்ந்த முகத்துடன் உலாவருகின்றனர். எமது மக்களைக் கனவிலும், அச்சுறுத்தி வந்த சிங்கள வான்கழுகுகள் இரண்டின் அழிவில், அந்த மகிழ்ச்சி பிறந்துள்ளது. தும்பி அடிப்பதுபோல அடுத்தடுத்து இரண்டு இராணுவ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டமை, தமிழர்களைப் பொறுத்தளவில் கொண்டாட்டத்திற்கும், மகிழ்ச்சிக்கும் உரியதே. எமது சக்திக்கு அப்பாற்பட்ட, எம்மால்த் தடுத்து நிறுத்த முடியாத ஒரு பேராயுதமாகவே இதுவரை காலமும் சிங்கள வான்படை விமானங்கள் இருந்தன. ஆனால், எல்லாவற்றையும் சாதித்துக்காட்டித் தலைவர் பிரபாகரன் அவர்கள் வான்போரிலும் ஒரு சாதனையைப்படைத்துவிட்டார். எங்களது வீடுகளை, எங்களது உறவுகளை, சிங்களப் படை விமானங்கள், 'சிதறு தேங்காய் போல' எமது மக்களின் கண்முன்னாலேயே நொடிப்பொழுதில் அழித்தபடி, சிதறிக் கிடந்த காட்சி, வானில் 'இராஜ வலம்' வந்த தேசத்திற்கு மிகப் பெரிதான நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

**பூநகரி சிங்களப் படைமுகாம் மீதான வெற்றியைத்தொடர்ந்து புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட பலத்தால் மகிழ்ச்சி அடைந்த தலைவர் பிரபாகரன் அவர்கள்; "11ஆம் திகதி (பூநகரி வெற்றிநாள்) ஒவ்வொரு புலி வீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன" என்று பிரகடனப்படுத்தினார். பத்துக் கைகள் கொண்ட புலிவீரர்களுக்கு, 29ஆம் திகதி இரண்டு இறக்கைகளும் முளைத்து விட்டன" என்று தமிழீழம் புளகாங்கிதம் அடைகிறது.**

இந்த நிகழ்ச்சியை, இரண்டு விமானங்கள் வெற்றிகரமாகச் சுட்டுவீழ்த்தப்பட்ட சம்பவங்களாக மட்டும் பார்க்க முடியாது. விடுதலைப் போரின் இறுதி வெற்றிபற்றிய அவநம்பிக்கைக் கருத்தும் சுட்டு விழ்த்தப்பட்ட ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே, இதைக் கருத வேண்டும்.

தமிழீழத் தனி அரசுக்கான ஆயுதப் போராட்டத்தைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பித்து 20 வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. ஒரு கைத்துப்பாக்கியுடன், உள்ளூரில் செய்யப்பட்ட ரவைகளைக் கொண்டு, ஒரு சில நண்பர்களின் துணையுடன், சிங்கள அரசுக்கு எதிராக அவர் விடுதலைப் போரைத் தொடுத்திருந்தார் என்பது மக்களுக்குத் தெரியும், அப்போதிலிருந்து, புலிகள் இயக்கம் இராணுவரீதியாகச் சந்தித்த ஒவ்வொரு சிக்கலையும் பார்த்துவிட்டு, இதை எப்படிச் சமாளிப்பது! அதை எவ்வாறு வெற்றிகொள்ளப் போகின்றீர்கள் என்று, மக்கள் அவநம்பிக்கை தொனிக்கும் கேள்விகளை எழுப்பி வந்ததை இந்த இடத்தில் நினைவூட்ட வேண்டியது அவசியம். ஆனால், ஒவ்வொரு தடையினையும் புலிவீரர்களைக் கொண்டு தலைவர் அவர்கள் உடைத்தெறிந்து காட்டியபோது, அடுத்ததை எப்படி வெல்லப் போகின்றீர்கள் என்று, கடந்த 20 வருட காலமாக, மக்கள் கேள்வி மேல் கேள்வி எழுப்பிக்கொண்டே இருந்தனர். போராட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப கேள்விகளிலும் ஒரு வளர்ச்சி இருந்தது. ஒரு கட்டத்தில், விமானங்களை வீழ்த்தமுடியுமா என்ற கேள்வியும் எழுந்திருந்தது. இன்று அதற்குரிய ஒரு தெளிவான பதில் மக்களுக்குக் கிடைத்துவிட்டது. அதனால் தேசம் மகிழ்ச்சியில் குளிக்கின்றது.

பலம், மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான். பூநகரி சிங்களப் படைமுகாம் மீதான வெற்றியைத் தொடர்ந்து புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட பலத்தால் மகிழ்ச்சி அடைந்த தலைவர் பிரபாகரன் அவர்கள், '11ஆம் திகதி (பூநகரி வெற்றிநாள்) ஒவ்வொரு புலிவீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன' என்று பிரகடனப்படுத்தினார், பத்துக் கைகள் கொண்ட புலிவீரர்களுக்கு, 29ஆம் திகதி 'இரண்டு இறக்கைகளும் முளைத்து விட்டன' என்று தமிழீழம் புளகாங்கிதம் அடைகிறது.

# பலத்த ஏமாற்றம்

நீண்ட பல வருடங்கள் தொடர்ச்சியாக நடந்த போரைத் தொடர்ந்து அமைதிச் சூழல் பிறக்கவும். அரசியல்த் தீர்வு ஏற்படவும் உருவாகிய ஒரு அரிய வாய்ப்பு, சந்திரிகா அம்மையாரின் இனவாத அணுகுமுறைகளாலும் தலைமைத்துவப் பலவீனங்களாலும் கை நழுவிப் போய்விட்டது. இதன் விளைவுகள் மூன்றாவது ஈழப்போரை ஆரம்பித்துவிட்டன.

தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றையும், போராட்டத்தை வழிநடாத்தும் தலைமையையும் சந்திரிகாவின் அரசு புரிந்து கொள்ள மறந்ததால், மீண்டும் இரத்தம் சிந்தத் தொடங்கியுள்ளது. உடன்பாடு கண்டதை நடைமுறைப்படுத்தும் நேர்மையும், ஒரு பல்லின அரசின் தலைமைக்குரிய இனச்சமத்துவப் பார்வையும் சந்திரிகா அம்மையாரிடம் இருந்திருந்தால், மூன்றாவது ஈழப்போர் தொடங்கியிருக்க மாட்டாது.

காலத்தை இழுத்தடித்தல்" என்ற புளித்துப்போன உத்தியைப் பயன்படுத்தி, தமிழினத்திற்கு உரிமை வழங்குவதிலிருந்து தப்பிப்போகச் சந்தரிகாவின் அரசு முயன்றதே, மூன்றாம் ஈழப்போருக்கு அத்திவாரமிட்டது. மிக நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டுவரும் இந்தப் 'பழைய உத்தி'க்கு முன்னைய தமிழ்த்தலைமைகளைப் போல புலிகளின் தலைமையும் பலியாகும் என, சந்திரிகா அரசு தப்புக்கணக்குப் போட்டது.

ஈழத்தமிழரின் வரலாற்றைப் பொறுத்தளவில், அரசியல் உடன்பாடுகள் காண்பது என்பது ஒன்றும் புதிய விடயம் இல்லை. சிலர் நினைப்பதைப் போல, சந்திரிகா அம்மையார் மட்டும்தான் தமிழருக்கு ஏதோ சிலவற்றைக் கொடுக்க முன்வந்த சிங்களத் தலைவர் என்றில்லை. முன்னரும் சில சிங்களத் தலைவர்கள் தமிழருக்குச் சில உரிமைகள் கொடுக்க முன்வந்திருந்தார்கள். ஆனால் எழுதிய உடன்பாடுகளை நேர்மையுடன் நடைமுறைப்படுத்தாது தட்டிக் கழிப்பதும், செய்த உடன்பாடுகளை மீறுவதும், மீறிவிட்டுச் சாட்டுக்கள் சொல்வதும், சிங்களத் தலைமைகளின் மரபாகிவிட்டது. பண்டா-செல்வா உடன்படிக்கையில் இருந்து, இந்திய-இலங்கை ஒப்பந்தம் வரை இந்த மரபை, பல சந்தர்ப்பங்களில் கண்கூடாகக் காணலாம். இந்த மரபிற்குச் சந்திரிகா அம்மையார் விரோதமானவர் என்பது உண்மையாக இருந்தால். அதை அவர் செய்து காட்டியிருக்கவேண்டும். அதற்குரிய கால அவகாசமும், ஒத்துழைப்பும் அவருக்குப் போதிய அளவில் இருந்தது. ஆனால், சந்திரிகா அம்மையார் அதைச் செய்யவில்லை.

**எமது மக்களின் அவசர, அன்றாடப் பிரச்சினைகளைத், தீர்த்து வைக்கின்றோம் என உறுதி அளித்துவிட்டு, அதைச் சரிவர அமுல்படுத்தாது காலத்தை இழுத்தடிப்பதை இளிச்சவாய்த்தனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று, புலிகள் இயக்கத்தை எவரும் கோரமுடியாது.**

சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளை அப்படியே நம்பி-காத்திருந்து- பின் ஏமாந்த கதைகள் எம் முன்னே இருக்க, திரும்பவும் அதே தவறைச் செய்ய புலிகளின் தலைமை தயாராக இருக்கவில்லை.

நடைமுறைப்படுத்தலுக்குக் கடினமான ஒரு விடயத்திற்காகச் சிலகாலம் காத்திருப்பது தவிர்க்க முடியாதது. அது புலிகளின் தலைமைக்கு நன்கு தெரியும். ஏனெனில், செய்திறனில் புலிகள் இயக்கத்திற்குச் சிறந்த அனுபவம் உண்டு. ஆனால். எமது மக்களின் அவசர, அன்றாடப் பிரச்சினைகளைத், தீர்த்து வைக்கின்றோம் என உறுதி அளித்துவிட்டு, அதைச் சரிவர அமுல்படுத்தாது காலத்தை இழுத்தடிப்பதை இளிச்சவாய்த்தனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று, புலிகள் இயக்கத்தை எவரும் கோரமுடியாது.

அமைதிச் சூழலை உருவாக்க முயன்ற கடந்த 4 மாதங்களிலும், புலிகள் இயக்கம் பற்றியும் தமிழ் மக்களது அவசரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் சந்தரிகா அம்மையார் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துக்கள், விவேகமானவையாக இருக்கவில்லை.

பகைமைகொண்டு போர்புரிந்த இரண்டு இனங்களின் தலைமைகள் ஒரே மேசையில் அமர்ந்து, பிரச்சனைகளைப் பேசித்தீர்க்க முயலும்போது, அந்த இனத்தின் தலைமைகளுக்கு இருக்கவேண்டிய நாவடக்கம், பண்பான அணுகு முறைகள், 'சொல்லளவிலாவது' நட்புரிமை பாராட்டல் என்ற அடிப்படை இராஜதந்திரத்தகுதிகளைக்கூட சந்திரிகா அம்மையார் வெளிக்காட்டவில்லை. புலிகளுடன் பேச்சவார்த்தைகளை நடாத்திக்கொண்டே, பத்திரிகைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் தொலைக்காட்சியிலும் புலிகளைக் கீழ்த்ரமாக விமர்சிக்கும் தவறான மனோபாவத்தைச் சந்திரிகா அம்மையார் கொண்டிருந்தார். இது இரு பகுதியினருக்கமிடையே பரஸ்பர நம்பிக்கையைக் குலைப்பதாகவும்- தேவையில்லாது சீண்டும் சண்டித்தனமுமாகவே இருந்தது.

ஆனால் மறுவளமாக, பேச்சுவார்த்தை முறியும் நிலை தோன்றிய கடைசி நொடிப் பொழுதுவரை, சந்திரிகா அம்மையாரை அல்லது அவரது அரசை விமர்சித்து, புலிகளின் தலைமை வார்த்தைக்குண்டுகளை வீசவில்லை. பதிலாக, சந்தரிகாவைப்புகழ்ந்து, அவரது சமாதான முயற்சியை ஊக்கப்படுத்தும் வார்த்தைகளையே புலிகளின் தலைமைப்பீடத்தினர் தெரிவித்துவந்தனர். அரசியல் ரீதியாக சந்திரகாவின் அரசை விமர்சிக்கும் அவசியம் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நிதானமான முறையில், பண்பான சொற்களைப் பயன்படுத்தியே, புலிகளின் தலைமை அரசியல் விமரசனங்களை முன்வைத்தது.

பேசும் முறையும், பேசும் பண்பும் சந்திரிகா அம்மையாருக்குத் தெரியாது என்று எவருங் கூற முடியாது. அப்படியாயின், தமிழரின் உரிமைபற்றிய பேச்சு எழும்போதும் புலிகள் இயக்கம் பற்றிய கதை வரும்போதும் மட்டும், சந்திரிகா அநாகரிகத்தைக் கடைப்பிடிப்பது ஏன்!

சிங்கள அரசின் தலைவர்களுக்கே உரித்தான பேரினவாதப் பார்வையும், தமிழ் இன விரோத உணர்வும் தான் அதற்குக் காரணங்கள். சிங்களப் பேரினவாதபூதத்திற்குச் சவாலாக எழுந்து விட்ட புலிகள் இயக்கம் பற்றிய பேச்சு எழும்போது. எந்தச் சிங்களப் பேரினவாதிக்கும், கோபமும் எரிச்சலும் வரத்தான் செய்யும். அது, சந்திரிகா அம்மையாராக இருந்தாலும் சரிதான், வண. ராகுல தேரர் ஆக இருந்தாலும் சரிதான்!

புலிகளின் குரல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அக்கினிப் பிரவேசம்

விடுதலைத் தீயுடன் சிறுமதிச் சிறீலங்கா சிறுபிள்ளைத்தனமாக மீண்டும் விளையாடத் தொடங்கிச் சூடுபடத் தொடங்கிவிட்டது. நரித்தனமதியுடன் நாவினால் நயம்படப் பேசி, 'சமாதானத்தீர்வு தருவேன் 'தா' உன் வாக்கினை எனக்கு' என, சிறீலங்கா மக்களிடம் வாக்குப் பெற்று ஆட்சிவாகனம் அமர்ந்த அம்மையார் சந்திரிகா வாக்களித்த சிங்கள மக்களின் பிள்ளைகளையே தனது இராணுவ மேலாதிக்க வெறிக்காகத் தமிழீழத்தில் பலியாக்கிக் கொண்டிருக்கிறார். இந்த உண்மையை உரைக்கத்திறனின்றிப் பொய் வதந்திகளைப் பிரச்சாரப்படுத்தி வருகிறார். தினந்தொறும் சிறீலங்காப் படையினர் அடுக்கடுக்காகத்தோல்விகளைத் தழுவிச்சரிகின்றனர். வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு நிலைபெற முடியாது என்ற உண்மை ஒவ்வொருநாளும் சிறீலங்காவுக்கு வெற்றிகரமான தாக்குதல்கள் மூலம் உணர்த்தப்படுகிறது. அன்று கிழக்கை ஆக்கிரமித்த பொழுது 'உங்களால் ஊடுருவத்தான் முடியுமே தவிர எங்கள் மண்ணில் ஒருபொழுதும் நிலைபெறமுடியாது' என்ற தலைவனின் வாக்கின் ஆழத்தைச் சிறீலங்கா அனுபவமாகப் படிக்கிறது. இதனாற்தான் 'அக்கினிப் பிரவேசம் செய்தழியாதீர்கள், அமைதிவழித் தீர்வின் மூலம் இரு தேசிய இனங்களும் இலங்கைத்தீவில் அமைதியில் இன்புறட்டும்' என அழைத்தனர் விடுதலைப் புலிகள். வலிமையும், வன்மையுமுள்ள அழைப்பையே விடுதலைப் புலிகள் விடுத்தனர். ஆனால் சந்திரிகாவோ சந்தர்ப்பம் கிடைக்கிறது சலுகைகள் வழங்கித் தந்திரமாகத் தமிழீழமக்களை மயக்கி, மக்களும் விடுதலைப் புலிகளும் வேறு என உலகுக்குக் காட்டத் துடித்தார். கருவாகி நிற்கும் விடுதலைப் புலிகளின் அரசைக் கருக்கலைப்புச் செய்யலாம் என்பதே அவரது கனவு. நானூறு கோடி என்றால் மக்கள் நாவூறித் தம் வசமாவார்கள் எனத் தவித்தார். வடக்கு- கிழக்கின் புனரமைப்புக்கு எனத் தொடங்கி யாழ் மாநகர சபையின் திருத்த வேலைக்கு என முடித்தார். அதைக்கூட இம்மியளவும் நடைமுறைப்படுத்தவுமில்லை.

எங்கள் தலைவர் பிரபாகரனோ போர்க் கைதிகள் விடுதலையைக் கண்ணியமாகச் செய்தார். அத்துடன் நில்லாது உண்ணா நோன்புக்குத் தலைவணங்கித் தானாகவே சிங்களப் போர்க் கைதிகளுக்கு விடுதலை வழங்கினார். தலைவரின் மனிதாய உணர்வுகண்டு அதற்கு பிரதியுபகாரமாகச் சிலபொருட்களின் தடையை நீக்குவதாக அறிவித்தார். ஆனால் நடைமுறையில் அப்பொருட்கள் கூட வடபகுதிக்கு வர அனுமதிக்கப்படவில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில் மீண்டும் போரை ஊக்குவித்த சந்திரிகா, தலைவர் பிரபாகரனையும், தமிழ்கூறும் நல்லுலகு கைதொழுது வணங்கும் சரித்திரச் சிற்பிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் மீண்டும் உண்மைக்கு மாறாக விமர்சிக்கும் பணியை தொடங்கிவிட்டார்.

இதனால் ஆர்ப்பரித்து எழுகின்றது உலகெங்கும் தமிழர் பெருங்கூட்டம். ஆனி 3இல் பிரித்தானியா உட்படப் பல ஐரோப்பிய நாடுகளிலும், அவுஸ்திரேலியா, கனடா போன்ற தமிழர் வாழும் இடமெல்லாம் பேரணி புறப்படுகிறார்கள் தமிழர்கள். 'எங்கள் தலைவன் அவனே! விடுதலை மறவர் அவர்களே! பொல்லாத கதைகளும், வஞ்சனைகளும் சிறீலங்காவின் பொய்ப் பிரசாரங்களே. வீணாக ஏமாறாதே உலகே! விரைவாக அங்கீகரி எம் தமிழீழத்தின் தலைமையை!' என்று சொல்லி நடக்கக் கூடுகின்றார்கள்.

நாடி வருவீர் நற்றமிழர் பேரணிக்கு. ஓடிக் கூடி வரும்படி தேடி உரைப்பீர் தமிழருக்கெல்லாம். எனது அன்னையின், எனது தந்தையின், எனது அண்ணனின், எனது அக்காளின், எனது தம்பியின், எனது தங்கையின் உயிராலும் உடலாலும் உணர்வாலும் கருவாகி நிற்பதே இன்றைய தமிழீழம் என்பதை உலகுக்கு உரைப்பது எமது கடமை. இப்பேரணியில் நிற்காத தமிழன் எவனாக இருந்தாலும் அவன் தமிழன் அல்ல என நாளைய வரலாறு கூறும். அவச் சொல்லுக்கு ஆளாக ஒரு தமிழன் கூட இடம் கொடுக்காது அணிநடைக்குத் திரள்க. ஒரு குரலிற் சொல்வோம் 'தமிழீழம் எங்கள் தாயகம். தலைவன் பிரபாகரனே எங்கள் தேசியத் தலைவன்'. வாருங்கள். சேருங்கள். கருவான தமிழீழம் உருவாகித் தேசமாக நாமும் சிறுபணியாற்றுவோம்.

# புலம் பெயர்ந்த தமிழ்மக்களே.

எமது விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கியகட்டம் இது. எமது விடுதலையை வேகமாகவும், விடாப்பிடியாக வென்றெடுக்கவும் வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலான எமது தாயக ஒருமைப்பாடு, எமது தன்னாட்சி உரிமை ஆகியவற்றினை அங்கீகரிக்கச் சிறீலங்கா அரசு, தொடர்ந்து மறுத்து வருவது, அவற்றுக்காக எமது மக்கள், விடுதலைப் புலிகளின் தலைமையில் இடைவிடாது போராடுவது ஆகியவை வெளிநாடுகளில், குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் வலியுறுத்தப்பட வேண்டும். கடுமையான, தியாகம் நிறைந்த போராட்டத்தினால் இவ்வுரிமைகள், பல்வேறு வடிவங்களாக உருப்பெற்று வருவது, புதிய அரசை நோக்கிய அரசாக நிதர்சனம் பெற்றிருப்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும். இவ்வுண்மை அனைத்துலக சமூகத்தால் அங்கீகரிக்கப்படுவதற்காக ஆணித்தரமாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். இத்தளத்திலேயே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படல் முடியும். இதைவிட்ட குறுக்கு வழிகள் போருக்கும் தொடர்ச்சியான அழிவுக்கும், பொதுமக்களின் உயிர், உடல் இழப்பிற்கும் வழிவகுக்கும் என்ற யதார்த்தம் தெளிவாகச் சொல்லப்படல் வேண்டும். இவ்வரலாற்றுப் போக்குக்குஎதிராக, உறுதிப்பட்ட உண்மைக்கு மாற்றாக, நீதிக்குப் புறம்பாகச் செயல்பட முனைதலும் அவ்வியக்கச் சக்திக்கு எதிரான நிலைப்பாடுகளும் வியர்த்தமானவை மட்டுமல்ல, தோல்வியையே தழுவும் என்பது உணர்த்தப்படல் வேண்டும். விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் சக்தியை அழித்தல் முடியாது என்பதும், சகல தடைகளையும் எதிர் கொண்டு முன்னேறிக் குடிசார் நிர்வாக வடிவங்களாகவும், பொருண்மியக் கட்டுமானங்களாகவும், வான் வரையிலான பாதுகாப்பு அரண்களாகவும் வளர்ந்து விட்ட விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயலுதல் வரலாற்றைவ் பின்நோக்கி நகர்த்தும் இயலாத செயல் என்பதும் எண்பிக்கப்படல் வேண்டும்.

இவ்வடிப்படையில், நாங்கள் அனைத்துலகச் சமூகத்துக்குச் சில கோரிக்கைகள் விட வேண்டியவர்களாக உள்ளோம். ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக அது தனது ஆதரவுக் கரத்தை நீட்டுமாறு கோருதல் வேண்டும். அடக்கு முறையாளனின் பக்கம் சார்ந்து, அவனது பிரச்சாரங்களுக்குஎடுபட்டு, எம்மீது அடக்குமுறையை அதிகரிக்க எடுக்கும் காரியங்கள் அதர்மமானவை. எனவே சிங்கள மேலாதிக்கத்துக்கு எவ்வித நிதி, ஆயுத, தளபாட உதவிகள் கொடுக்கப்படக் கூடாது என்பது எமது கோரிக்கையின் முக்கியமான அம்சமாக இருத்தல் வேண்டும். இதே வேளை, நீதியானதும், அனைத்துலக சட்டங்களுக்குட்பட்டதும், மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதுமான எமது போராட்டத்துக்குச் சகல விதமான தார்மீக உதவிகளை வழங்குமாறும், போராட்டத்துக்கு துணையாகச் செயற்படுமாறும் நாம் கோர வேண்டும்.

நாம் விடுதலை என்ற இலக்கை நெருங்க நெருங்க, எமது விடுதலைப் போராட்டத்துக்குரிய அங்கீகாரம் அதிகரித்து வருகிறது. இதே வேளையில், சிறீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரத்தாற் கவரப்பட்ட சில நாடுகள் எம்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் முற்பட்டுள்ளன. இவ்வழுத்தங்களை எமது மக்களின் பூரணமான அணிதிரளல் மூலமும், அவர்களது ஆழமான அபிலாசைகளை வெளிப்படுத்தல் மூலமுமே எதிர் கொள்ள முடியும். விடுதலைப் போராட்டத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமான மக்களின் ஆதரவைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதன் மூலமே இதனைச் சாதிக்கலாம். மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுதல், அதாவது, எமது மக்களது பாதுகாப்பு, கௌரவம், முன்னேற்றம் ஆகியவற்றை நிரந்தரமாக நிலைக்கச் செய்வதற்கு எமது அரசியல் விடுதலை ஒரு முன் நிபந்தனையாகின்றது. இதுவே நிரந்தரமானதும், நியாயமானதுமான சமாதானத்தை ஏற்படுத்தும். இவ்விலக்கை நோக்கி எமதுவிடுதலைப் போராட்டத்துக்கு அனைத்துலக அங்கீகாரத்தைக் கோரவும், பெறவும் நாம் அனைவரும் விடுதலைப் புலிகளின் பாதையின் கீழ்அணி திரளுவோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஏவுகணை எதிர்ப்பு விமானங்கள் ரசியாவிடம் வாங்க முயற்சி

ஏவுகணை எதிர்ப்பு விமானங்களை கொள்வனவு செய்ய சிறீலங்கா விமானப்படை நிபுணர்கள் ரசியா உட்பட பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அத்துடன் டோராப் படகு கொள்வனவுக்கும் ஒரு குழு இசரேல் சென்றுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் தினமும் நாளாந்த நிலைமை குறித்து ஆராயப்படுகிறது. ஏ.என்-32 ரக இராணுவ போக்குவரத்து விமானங்களும், எம்.ஐ உலங்குவானூர்திகளும் ஆப்கான் போரில் ரசியாவினால் விமான எதிர்ப்புகளின் மத்தியில் செயறப்பட்டவை எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அத்துடன் 300 தொன் நிறையுடைய இரு பீரங்கிப்படகுகளைக் கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது ஈழப்போர்...

படைமுகாமைப் புலிகள் தாக்கும்போதோ ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்யும் போதோ போர் விமானங்களின் துணை படையினர்க்கு கிடைக்காது என்பதை அறிந்தாலே, அவர்களது போரிடும் உறுதி வீழ்ச்சியடைந்துவிடும் இதனால் தோல்விகளும் பாரிய இழப்புகளும் சிங்களப்படையின் நிரந்தர நண்பர்களாகவே மாறும் சாத்தியங்களும் உண்டு.

கடலிலும் வானிலும் இன்று சிங்களப்படைக்கு ஏற்பட்டுள்ள முடக்கநிலையைத் தீர்க்க அரச தனது வான்படையையும் கடற்படையையும் முற்றுமுழுதாக மாற்றி அதிநவீனப்படுத்தவேண்டி வரும். இது அரசுக்கு சாத்தியமானதா என்ற கேள்வியும் எழுகிறது. அப்படித்தான் சாத்தியமானாலும் அந்த அதிநவீன ஆயுதங்களை அழிக்கும் ஆற்றலை புலிகள் இயக்கம் தொடர்ந்து பேணிக்கொண்டேயிருக்கும்.

ஏனெனில் தலைவர் பிரபாகரனது விடா முயற்சியும் போர்க்களத்தை நெறிப்படுத்தும் அவரது அபாரதிறனும் தமிழினத்துக்கு தொடர்ந்து வெற்றிகளையே தேடித்தரும் என்பது உறுதி. அதேவேளை **கரும்புலிகளின்** செயற்திறன், எதிரி-போடும் எந்தத்தடைகளையும் தகர்ப்பதுடன், எதிரி பயன்படுத்தும் எந்த நவீன கருவிகளையும் வெற்றிகொள்ளும் என்பதும் திண்ணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நாம் சொல்வதை ஏற்கும் நிலையில் இன்று சந்திரிகா இல்லை

### - வாசுதேவ தெரிவிப்பு

அரசாங்கம் இன்று சொல்வது ஒன்று நினைப்பது ஒன்று, செய்வது வேறொன்று. அரச கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சொல்வதை சந்திரிகா கேட்பதில்லை. நாம் சொல்வதை ஏற்றுக் கொள்ளும் நிலையிலும் ஜனாதிபதி சந்திரிகா இல்லை. ஆட்சிக்கு வந்ததும் அவர் தனது நோக்கத்தை மறந்து விட்டார் என இரத்தினபுரி மாவட்ட எம். பி. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அவரது கொள்கை சோசலிசமா? முதலாளித்துவமா? என்று தெரியாமல் உள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி தனது கொள்கைத் திட்டத்திலிருந்து விலகிச் செல்கிறது என்றார்.

# கணவர் வருகைக்காக 5 வருடமாக காத்திருக்கிறேன், கண்டுபிடித்துத் தாருங்கள்!

வங்கி முகாமையாளரின் மனைவி சாட்சியம்

"இங்குரான இலங்கை வங்கிக் கிளையில் முகாமையாளராக கடமையாற்றிய எனது கணவர் சிவராசசேகரம் (38 வயது) 17.7.1990 இல் பழுகாமம் கிராமம் சுற்றிவளைக்கப்பட்ட போது இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். ஐந்து வருடங்களாக அவரது வருகைக்காகக் காத்திருக்கிறேன் ஆணைக்குழு எப்படியாயினும் எனது கணவரைத் தேடிப்பிடித்து தரவேண்டும்" என்று பழுகாமத்தைச் சேர்ந்த திருமதி பரிமளராணி சிவராசசேகரம் (வயது 36) கேட்டுக்கொண்டார்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை நடத்தும் சனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் இவர் சாட்சியமளித்தார்.

நீதிபதி கே. பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழு மட்டக்களப்பில் விசாரணைகளை நடத்தியபோது இப்பெண் சாட்சியமளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"1990ஆம் ஆண்டு பிரச்சினைகள் ஆரம்பித்தபோது பழுகாமத்திற்கு 17.7.90இல் வந்த இராணுவத்தினர் ஆலயத்தில் தங்கியிருந்தார்கள். அன்றைய தினம் பலரை விசாரணைக்கு அழைத்துச் சென்றார்கள்.

எமது வீட்டிலிருந்த கணவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். எனது கணவர் மும்மொழிகளையும் சரளமாகப் பேசக் கூடியவராக இருந்தார். இதனால் கைது செய்தவர்களை விசாரணை செய்ய உதவுமாறு கூறி அழைத்துச் சென்றார்கள். சிலமணி நேரத்தில் விடுவதாகவும் கூறிச் சென்றனர்.

அன்று இரவு பழுகாமம் கோயிலில் தங்கியிருந்த இரணுவம் மறுநாள் காலை அங்கிருந்து சென்றது. அதன் பின் அங்கு சென்று பார்த்தபோது உருத்தெரியாமல் எரிந்த நிலையில் ஏழு சடலங்கள் கிடந்தன.

ஆணைக்குழு: அதில் உங்களுடைய கணவரின சடலம் இருக்கவில்லையென எப்படிக் கூறுவீர்? அவை அடையாளம் காணமுடியாத நிலையில் அல்லவா இருந்தன?

சாட்சி: (அழுதவண்ணம்) அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்தன. ஆனால் அவைகளில் எதுவும் எனது கணவரது சடலமாக இருக்காது என நம்புகிறேன்.

ஆணைக்குழு: எவ்வாறு அப்படிக் கூறுவீர்?

சாட்சி:அவர் உயிருடன் தான் இருப்பார், எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது. அவர் எங்கோ உயிருடன் இருப்பார்.

ஆணைக்குழு: அவர் உயிருடன் இருந்தால் அவரைக் கண்டுபிடித்துத் தருவதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருக்கிறது. எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என நம்புகிறீர்கள்.

சாட்சி: களுத்துறை மாவட்டத்திலுள்ள தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன்.

ஆணைக்குழு: எவ்வாறு அறிந்தீர்?

சாட்சி: எனது கணவரின் சிங்கள நண்பர்கள் கூறினார்கள்.

மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த மேரி அக்னஸ் மாணிக்கராசா (ஆசிரியை) (வயது 35) சாட்சியமளிக்கையில் "எனது கணவர் குமாரசாமி மாணிக்கராசா (வயது 43) ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் வீதி வழியாக 6.7.90இல் வந்தபோது வெள்ளை நிற வானில் வந்தவர்களினால் பிடித்து ஏற்றிச் செல்லப்பட்டார். மட்டக்களப்புச் சிறைச்சாலை இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அறிந்தேன். இன்னும் வீடு திரும்பவில்லை" என்றார்.

திருமதி ஜெனட் சியாமளா கொவின் (34 வயது) சாட்சியமளிக்கையில் "நான் ஆசிரியையாகப் பணியாற்றுகிறேன். 5.7.90இல் எமது பகுதி சுற்றிவளைக்கப்பட்டபோது எனது தம்பி டானியல் சின்னத்துரை (19 வயது) விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டார். இன்னும் வீடு திரும்பவில்லை. காட்டுக்கந்தோர் முகாமில் தான் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். பல தடவை அங்கு சென்று விசாரித்தேன். பயன் ஏதும் கிட்டவில்லை. ஆணைக்கழு எப்படியாவது எனது தம்பியைக் கண்டுபிடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருமதி அருளன்னதேவி ரகுநாதன்(50 வயது) மட்டக்களப்பு சாட்சியமளிக்கையில் "எனது கணவர் பி. கே. இரகுநாதன் (வயது 48) மட்டக்களப்பு வைத்தியசாலையில் டாக்டராகப் பணியாற்றினார். 25.10.90 இல் எனது கணவர் கடமைக்காக சென்றார். வழமையாக மதியம் 12 மணியளவில் சாப்பாட்டிற்காக வருவார். அனால் அன்று 3 மணியாகியும் வரவில்லை. எனது சகோதரனை அனுப்பி விசாரித்தபோது நண்பகல் 12 மணிக்கு வீடு சென்றதாக வைத்தியசாலையில் கூறினார்கள். மட்டக்களப்பு சிறைச்சாலை முகாமைச் சேர்ந்தவர்கள் கணவரை கைது செய்ததாக அறிந்தேன். அங்கு பொறுப்பாக இருந்த காப்டன் முனாஸிடம் விசாரித்தேன். எனது கணவரை பிடிக்கவில்லை. வேறு முகாமில் விசாரிக்குமாறு கூறினார்.

கொழும்பிலிருந்து வந்தபோது 15.10.90இல் மின்னேரியா முகாமில் எனது கணவர் பிடிபட்டபோதிலும் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்" எனக் கூறினார்

# சுப்பர் சொனிக் தாக்குதல் வடக்கில் 6 பேர் காயம்

தொண்டைமானாறு பகுதியில் சுப்பர் சொனிக் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த 30.04.95 அன்று தொண்டைமானாறு கடற் பகுதியின் மேலால் பறந்து வந்த சுப்பர் சொனிக் விமானம் தாக்கியதில், தங்கவேல் வைரமுத்து (வயது 28), தங்கவேல் அகிலா (வயது 23), சிவானந்தஐயர் போகம்மா (வயது30), துரைரட்ணம் அரியமலர் (வயது49), ஐங்கரன் (வயது50), ஆகியோரே காயமடைந்தவர்களாகும். இவர்களில் ஐங்கரன் மோசமான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. விமானத் தாக்குதலில் இருந்து ஏவப்பட்ட எட்டு எறிகணைகளில் இரண்டு வெடிக்கவில்லை எனத தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலால் இரண்டு மாடுகளும் கொல்லப்பட்டுள்ளன.

## கிழக்கில் சில இடங்களில் திடீர் நிலஅதிர்வு! கதவுகள், யன்னல்கள் கணநேரம் நடுங்கின.

கல்முனை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, காரைதீவு பகுதிகளில் அதிர்வு ஏற்பட்டது. சுமார் அரைநிமிடத்துக்கும் குறைந்த நேரம் இது நீடித்தது.

நில அதிர்வு ஏற்பட்ட நேரம் ஜன்னல்கள், கதவுகள் திடீரென நடுங்கின. வீதியில் சென்றோரும் தலைசுற்றுவது போல உணர்ந்தனர். ஆனால் பாரதூரமான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளையில் சில தினங்களாக பெய்து வருகின்ற கடும் மழை காரணமாக நிந்தவூர் மாட்டுப்பள்ளை அணைக்கட்டு உடைந்துள்ளது. இதனால் விதைக்கப்பட்ட வயல்களில் வெள்ளம் பாய்கிறது.

# குச்சவெளியில் மீளக்குடியேறிய குடும்பங்கள் வெளியேற்றம்

குச்சவெளி பகுதியில் மீளக் குடியேறிய தமிழ் மீனவக் குடும்பங்கள் பலவும் அங்கிருந்து மீண்டும் இடம்பெயர ஆரம்பித்துள்ளன. பய, பீதியே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்வோர் நிலாவெளி, திருகோணமலை பகுதிகளில் உள்ள தங்கள உறவினர், நண்பர்களின் இல்லங்களில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

கடற்கரைப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய 97 குடும்பங்களில 80 குடும்பங்கள்வரை இதுவரை வெளியேறியுள்ளன.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் சோளகக் காற்று மீண்டும் வீச ஆரம்பித்துள்ளது. பலத்த வேகத்துடன் வீசும் இக்காற்றின் விளைவாகப் பாரிய மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன. திருகோணமலை மூதூர் இயந்திரப்படகு சேவையும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

# கெப்பற்றி கொல்லாவ பொலீஸ் காவல் நிலையம் மீது தாக்குதல், 21 சிங்களப்படையினர் பலி

அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கெப்பற்றிகொல்லாவ பகுதியிலுள்ள காட்டுப்புளியங்குள பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 பொலீஸாரும், நான்கு ஊர் காவல் படைவீரர்கள் உட்பட 21பேர் கொல்லப்பட்டனர். பொலீஸ் காவலறையில் இருந்த அனைத்து ஆயுதங்களும வானொலி தொடர்பு கருவிகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றிச் செல்லப்பட்டுள்ளதாக அனுராதபுரம் பொலீஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட இரு சிவிலியன்களில் ஒருவர் காவல் நிலையபொறுப்பதிகாரியின் மனைவி என பொலீஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடுநிசி நேரத்துக்கு சற்று பின்பு இந்த காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் சிறிய ரக ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தியதாகவும், பின்னர் காவலறையை கைப்பற்றி ஆயுதங்களை கைப்பற்றிச் சென்றிருப்பதாகவும் அனுராதபுரம் நடவடிக்கைகள் பணியக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கோணேசர் கோயிலுக்குள் புத்தருக்கு விகாரை

திருகோணமலைக் கோணேசர் ஆலயப் பிரதேசத்தினுள் பௌத்த விகாரை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

பன்னெடுங் காலமாக ஈழத்தில் உள்ள இந்து மதத்தவர்களின் பாரிய நம்பிக்கைக்குரிய தலமாகவும் பிரசித்திபெற்ற ஆலயமாகவும் உள்ள கோணேஸ்வரர் ஆலயத்தினுள் புத்தர் சிலை அமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் அப்பகுதியில் உள்ள இந்துக்கள் மனவருத்தம் அடைந்துள்ளனர்.

இதைவிட திருகோணமலைப் பிரதேசங்களில் மிகவேகமாக சிங்களக் குடியேற்றங்கள் அரசபடைகளின் உதவியுடன் சிறிலங்கா அரசால் ஏற்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# உயரப் பறந்து குண்டு வீச்சு ஒருவர் பலி, மூவருக்கு காயம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தன், குமரபுரம் பகுதிகளில் சுப்பர் சொனிக் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

விடுதலைப் புலிகளின் நிலையொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பலியானதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. குண்டுத் தாக்குதலில் மேலும் மூவர் காயமடைந் துள்ளனர். சுப்பர்சொனிக் விமானங் கள் மிகவும் உயரத்திலிருந்தே தாக்குதல்களை நடத்தியதாக கூறப்படுகிறது.

செல்லிப்பழையிலுள்ள இராணுவ நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிவிலியன் ஒருவர் மரணமடைத்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் பிரச்சாரக் கருவியாக வானொலி, ரூபவாகினி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும், ரூபவாகினி கூட்டுத்தாபனத்தையும் முற்றிலுமாக, போர்ப் பிரச்சாரக் கருவிகளாக மாற்றுவதற்காக, இக்கூட்டுத்தாபனங்களுக்குப் புதிய பணிப்பாளர்கள் தெரிவாகவுள்ளதாகத் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

அரசு போரைத் தொடர்வதற்குப் பிரச்சாரம் செய்யப் பொருத்தமானவர்கள் இக்கூட்டுத்தாபனங்களுக்குத் தேவை. இந்நிலையிலேயே ரூபவாகினி பணிப்பாளர் வசந்தராசாவையும் மாற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

போர்ப் பிரச்சார நடவடிக்கைக்குப் பதவியில் உள்ள வசந்தராசா தடையாக இருப்பார் என அரசு கருதுவதாகக் கொழும்புச் செய்தித்தாள் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## இராணுவத்திற்கு மேலும் நிதி ஒதுக்க அமைச்சரவை முடிவு

தற்போதைய நிலையில் பாதுகாப்பிற்கென மேலும் நிதி ஒதுக்குவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அமைச்சரவை கூடி, 150 கோடி ரூபாவை போருக்கென மேலதிகமாக ஒதுக்குவது எனத் தீர்மானித்துள்ளது.

இத்தொகை மூலம் சிறுரக ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே பாதுகாப்பிற்கென 2400 கோடி ரூபா, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பிற்கென மேலதிகமாக ஒதுக்கப்பட்ட நிதி, உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய நிதி உதவியின் 6 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு புனரமைப்பிற்கான ஒதுக்கீடு வேறு மாகாணங்களுக்கு மாற்றம்

வடமாகாணத்திற்கான புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. முன்னர் திட்டமிடப்பட்டிருந்த பல திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வடக்குத் தவிர்ந்த, சிங்கள மக்கள் அதிகம் குடியமர்த்தப்படுகின்ற-குடியிருக்கின்ற பகுதிகளை புனரமைப்பதற்கும்-புனர்வாழ்வு வழங்குவதற்கும் சந்திரிகா அரசு திட்டமிட்டுள்ளது. சனாதிபதி சந்திரிகாவின் இத்திட்டத்திற்கு புனர்வாழ்வு-புனர்நிர்மாண அமைச்சர் எம்.எச்.எம். அசரப் பூரண ஆதரவு வழங்கி வருகின்றார்.

வடமாகாணத்தின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படுமென எதிர்பார்த்த பல இலட்சம் ரூபா நிதியை, வெவ்வேறு மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அசரப் முயற்சி மேற்கொள்கின்றார்.

இது தவிர, கிழக்கு மாகாணத்தில் சிங்கள, முசுலிம் மக்களின் புனர்வாழ்வுக்கென பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# அதிரடிப்படையினர் பெண்கள் மீது கொடூரம்

கிழக்கில் சிறீலங்கா அதிரடிப்படையினர் பெண்களைக் கைது செய்து கடும் இம்சைகளுக்கு உள்ளாக்கி வருகின்றனர். குறிப்பாக புலுகுநாபி என்ற காட்டுப்புறப்பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாளரான சோமபால என்பவர், கொடூரமான முறையில் பெண்களை இம்சித்துவருவதாகக் கூறப்படுகின்றது.

பெண்களை நிர்வாணமாக்கி கட்டிவைத்து அடிப்பது போன்ற கோரச் சித்திரவதைகளை இவர் மேற்கொள்வதாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் கூறுகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பில் அதிரடிப்படையினர், பொதுமக்கள் மீதான அடாவடித்தனத்தைக் கட்டவிழ்த்துள்ளனர். ஆண், பெண் வேறுபாடின்றி பலர் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர். சில பெண்கள் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தாம் நடத்தும் தாக்குதலில் காயமடைவோர் மருத்துவமனைக்குச் செல்லக்கூடாது என்றும் அதிரடிப்படையினர் உத்தரவிட்டுள்ளனர். இதனால் பலர் மருத்துவ உதவியின்றி காயங்களுடன் அவதியுறுகின்றனர். மாலை 6 மணிக்குப்பின் நடமாடவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# எல்லையோர தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் தீவிரம்

சிறீலங்கா அரசு மூன்று தமிழ்ப் பிரதேசங்களில் திடீர் என்று சிங்கள மக்களைக் குடியமர்த்துவதைத் தீவிரப்படுத்தியுள்ளது.

வவுனியா, மணலாறு, திருக்கோணமலை ஆகிய தமிழ்ப் பிரதேசங்களை முற்றுமுழுதாக சிங்கள மயப்படுத்தும் நோக்குடன் ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்களைஅரசு குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தை அபகரிப்பதுடன், தமிழ் மக்களின் தாயக பூமியைத் துண்டாடுவதும் அரசின் திட்டம் என தெரியவருகிறது.

இதேபோல, கடந்த காலங்களிலும் சிங்கள அரசுகள் தமிழர்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட போதும், சந்திரிகாவின் புதிய அரசு திடீர் என இத்திட்டத்தில் தீவிரம் காட்டியிருப்பதாக அறியவருகின்றது.

இதற்குச் சிறீலங்காவின் இராணுவமும், சிங்கள அதிகாரிகளும் அமைச்சுக்களும் ஒத்துழைப்பு வழங்குவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## விமானப்படையின் உதவியின்றி இராணுவ நடவடிக்கை சாத்தியமாகா

பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டபோதும், விமானப்படையினரின் ஒத்துழைப்பு இன்றி அவற்றை நடைமுறைப்படுத்த முடியாது என இராணுவத் தலைமை அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானப்படையின் ஒத்துழைப்பு இன்றி மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், படையினருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது காயமடையும் படையினரைச் சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல, அப்பகுதியில் உலங்கு வானூர்திகள் இறங்கக்கூடிய வசதி இருக்க வேண்டும் என அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# புல்மோட்டையில் 4 முசுலிம்கள் இராணுவத்தால் சுட்டுக்கொலை

புல்மோட்டையில், அண்மையில் முசலிம் மக்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு முசலிம்கள் பலியாகினர். முன்னதாக இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 6 படையினர் பலியாகினர் என்றும், மோதலின் இடையில் சிக்கி நான்கு பொதுமக்கள் பலியாகினர் என்றும் பாதுகாப்பமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் இப்பகுதி முசுலிம்கள், புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறியே படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் திருமலை எம்பி. நஜீப்மஜீத் கூறியுள்ளார்.

# வெளிநாட்டு உதவியின்றி விமானங்கள் பறக்க முடியாது

பலாலி விமானப்படைத் தளத்திற்கு மீண்டும் விமானப்படை விமானங்களைக் கொண்டு செல்வதாயின், சிறீலங்கா விமானப்படை வெளிநாட்டு உதவியையே நாடவேண்டியிருக்கும் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக அரசு ஏற்கனவே உத்தியோகபூர்வமற்ற கோரிக்கைகளை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படை விரைவில் நவீனமயப் படுத்தப்படுவதுடன்,

ஏவுகணைகளைச் செயலிழக்கச் செய்யக்கூடிய தொழில்நுட்பத்துடனான விமானங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இவ் ஆய்வாளர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

புலிகளின் தாக்குதல் தீவிரமாகின் அரசு, இராணுவத்தினர் தொடர்பாகக் குறிப்பாக, அவர்களின் உயிர் தொடர்பாக விரைவான முடிவை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## புளுக்கொடியல் இனிப்பு

தமிழீழ மக்களின் மத்தியில் பிரபல்யமடைந்திருந்த புளுக்கொடியல் இனிப்பு மீண்டும் தயாரிக்கப்படவுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உற்பத்தியான இந்த இனிப்புக்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இராணுவம் கூட்டிச் சென்ற 171பேரின் நிலை என்ன?

சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் போன்ற கிராமங்களில் 90 ஆம் ஆண்டு புரட்டாதி 9 ஆம் நாள் நடந்த இராணுவ சுற்றிவளைப்பில், காணாமல் போன 171 பொதுமக்கள் தொடர்பாக அப்போதைய மட்டு மாவட்ட இராணுவப் பிரகேடியர் செனவிரத்னாவிடம் தொடர்பு கொண்ட போது அவர் எம்மைச் சந்திக்க மறுத்துவிட்டார். இவ்வாறு வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் சாட்சியமளித்த முன்னாள் சமாதானக் குழுத்தலைவரும், ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபருமான தளையசிங்கம் அருணகிரிநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில், 10.09.90 அன்று காலை எனக்கு தொலைபேசித் தகவல் ஒன்று கிடைத்தது. கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி போன்ற கிராமங்களில் 171 பொதுமக்கள் வரை கொலை செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்க, அக்கிராமங்களில் வசித்த மக்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். நான் அவர்களை கத்தோலிக்க மண்டபத்திலிருக்கும் சமாதானக் குழு அலுவலகத்திற்குச் செல்லுமாறு கேட்டேன்.

அங்கு சென்று அவர்களது சாட்சியங்களைச் சமாதானக் குழு உறுப்பினர்களின் உதவியுடன் பதிவு செய்தேன்.

09.09.90 அன்று காலை 5.30 மணியளவில் இராணுவ சீருடை தரித்தவர்களும், சாதாரண உடையில் வந்தவர்களும் மேற்படி கிராமங்களில் வீடுவீடாகச் சென்று பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட அனைவரையும் வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதிக்கு வருமாறு பணித்தனர்.

கட்டளையை ஏற்க மறுத்தால் சுடுவதாகவும் எச்சரித்தனர்.

இதனால் வீட்டில் இருந்த அனைவரும் பிரதான வீதிக்குச் சென்றனர். பின்னர் அங்கிருந்து சத்துருக்கொண்டான் 'போயிஸ் டவுண்' இராணுவ முகாமுக்குப் போகுமாறு கேட்கப்பட்டனர்.

எமது தகவல்களின்படி, இச்சம்பவத்தில் 184 பேர் காணாமல் போயுள்ளனர். இச்சம்பவம் பற்றி அறிந்த ஒருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக அறிந்து அங்கு சென்றேன்.

அங்கு 'கிறிஸ்' கத்தியினால் குத்தப்பட்ட காயத்துடன் கந்தசாமி கிருஸ்ணகுமார் (வயது 25) என்பவர் சிகிச்சை பெற்று வந்தார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த சிலரிடம் அங்கு சென்ற சிலர், உண்மையைக் கூறினால் சுட்டுவிடுவதாக எச்சரித்திருந்தனர்.

நான் எனது காரில் அவரை அழைத்து வந்து, சமாதானக்குழு உறுப்பினரான பிதா மில்லரிடம் ஒப்படைத்தேன்.

மேற்படி இளைஞர் கூறிய தகவலின்படி சத்துருக்கொண்டான் முகாமிற்குக் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் இரவானதும் முகாமின் பின்பக்கம் கூட்டிச் செல்லப்பட்டனர், கண்டபடி தாக்கப்பட்டபின் கத்திகளினால் அவர்கள் குத்தப்பட்டு குழிகளில் போடப்பட்டனர் எனத் தெரியவந்தது.

அப்போதைய மட்டக்களப்பு பிரிகேடியர் செனவிரத்னாவின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்தோம். இது குறித்து எம்மைச் சந்தித்துப் பேச அவர் மறுத்துவிட்டார். ஏனைய இராணுவ அதிகாரிகளும் அப்போது பேச மறுத்தனர் என சாட்சி மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நோர்வே அரசின் உயர்மட்டத் தூதுக்குழு யாழ் செல்ல முயற்சி, அரசு அனுமதி மறுப்பு

விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசிற்கும் இடையில் அமுலில் இருந்த மோதல் தவிர்ப்பு நடவடிக்கையைக் கண்காணிப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவிற்கு இரு பிரதிநிதிகளை அனுப்பிய நோர்வே அரசு, உயர்மட்டத் தூதுக்குழு ஒன்றையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கு முயற்சித்து வருகிறது. இத்தூதுக்குழு இன்றைய அரசியல் நிலை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளது. மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இவ் உயர்மட்ட தூதுக்குழுவில் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட தூதுவர், நோர்வே வெளி விவகார அமைச்சின் விசேட ஆலோசகர், கொழும்பில் உள்ள நோர்வே தூதுவர் ஆகியோரே இடம் பெறவுள்ளனர்.

இவர்களின் யாழ் விஜயத்திற்கு விடுதலைப் புலிகள் அனுமதியை வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆனால் தமிழீழம் மீது பெரும் போர் ஒன்றைத் தொடுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்துவரும் சிறீலங்கா அரசு, மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கியதற்குப் பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களையோ, வெளிநாட்டு அவதானிகளையே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல தடைவிதித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் யாழ்ப்பாணம் செல்லவென வருகை தந்துள்ள பல வெளிநாட்டுச் செய்தியாளர்களும், அவதானிகளும் அரசின் அனுமதிக்காகக் கொழும்பில் தங்கியிருப்பதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## நீரடி நீச்சல் படையணியின்...

நகர்வுப் பாதைகள், கப்பல்களின் தொழில்நுட்பம் போன்ற வேவுகளை அறிதல்: தமது பிரதான கடற்கலங்கள், கடற்தளங்கள் என்பனவற்றை எதிரியிடமிருந்து பாதுகாத்தல். தம்மால் மேற்கொள்ளப்படும் தரையிறக்கம் ஒன்றின்போது தமது துருப்புகளுக்குப் பாதுகாப்பு வழங்கல்: எதிரிகளின் கட்டுப் பாட்டிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தினுள் ஊடுருவி, பிராதான இலக்குகள் மீது திடீர்த் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் போன்றவைகளும் அடங்கும். இவ்வாறான தமது பணிகளுக்காக இவர்கள் நீரடி நீச்சலுக்கான 'ஸ்குபா' உபகரணம், (Scuba-Single Cylinder Underwater Breathing Aparataus) மற்றும் கடலினுள் பயன்படுத்தும் 'ஸ்கூட்டர்' (Sea Scooter) மற்றும் காற்றடிக்கும் படகுகள் (Baloon Boats), சிறு ரக நீர்மூழ்கிகள் (Midgtsubmarines) நீரடி வாகனங்கள் (Underwater Vehicles), நீரடியில் பயன்படுத்தும் கைத் துப்பாக்கிகள் (Undewater Pistol) என்பவற்றையே பயன்படுத்துகின்றனர்.

இந்த வகையில் இவர்களைப்போல அளவிலும் ஆற்றலிலும், இராணுவ வளங்கள் குறைவாகவே உள்ள நிலையிலும்கூட, கடற்புலிகளின் சிறப்புப் பிரிவான சுலோஜன் நீரடி நீச்சற் படையணியும், அங்கயற்கண்ணி நீரடி நீச்சற் படையணியும் தமது எதிரிக் கடற்படையான சிறீலங்காக் கடற்படைக்கு முகம் கொடுத்து, இன்று வெற்றிவாகை சூடியுள்ளனர். சிறீலங்கா கடற்படையிலும் சுழியோடிகள் பிரிவொன்று நிறுவப்பட்டு இந்தியாவிலுள்ள கொச்சின், வெந்துருதி ஆகிய இடங்களிற் பயிற்சி பெற்று, 75பேருக்குக் குறையாத ஆள்த்தொகையைக் கொண்டுள்ளபோதும், கடற்புலிகளின் விசேட பிரிவுகளிடமிருந்து தப்புதல் என்பது அதிஸ்டத்துக்குரிய ஒன்றாகும்.

## முடியாதுதென்று சொல்லாதே முடித்து விடு தமிழரை!! அனுருத்த ரத்வத்தை படையினருக்கு ஆணை

"முடியாது என்று யாருமே சொல்ல முடியாது. அப்படி யாராவது சொல்ல விரும்பினால் அவர்கள் தங்கள் பதவிகளை உடனடியாகத் துறக்க வேண்டும்"

இவ்வாறு சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சிறீலங்கா முப்படைத் தளபதிகளுக்கு ஆணையிட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. அனுராதபுரத்தில் மீளவும் சந்திரிகா அரசால் திறக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்குக்கான இராணுவத் தலைமைப் பணியகத்தில் அனுருத்த ரத்வத்த சிறீலங்காவின் முப்படைத் தளபதிகளுக்கான உச்சிமாநாடு ஒன்றை நடாத்தி இவ்வாறு கண்டிப்பான உத்தரவை வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்களுக்கு முன்னால் நிலைகுலைந்து போய் நிற்கும் சிறீலங்காப் படைகளைத் தலைமைதாங்கும் தளபதிகள் தம்மிடம் இருக்கும் இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் ஆட்கணக்குக்குப் பொலிவாகத் தோன்றுகிறார்களே தவிர தமிழீழ மண்ணில் அடிஎடுத்து வைத்தால் அடியோடு சாய்ந்திடுவர் என்பது படைத்தளபதிகளுக்கு நன்கு தெரியும். இதனால் தடுமாறிக் கொண்டிருக்கும் முப்படைத் தளபதிகளையும் முடுக்கிவிடும் பணியில் ரத்வத்த வேகமாக இறங்கியுள்ளார்.

## தாண்டிக்குளத்தை தாண்ட லொறிகளுக்கு தடை இரு லொறிகளுக்கு குண்டுவைத்து தகர்ப்பு

மூன்றாங்கட்ட ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை, தாண்டிக் குளத்திற்கூடாகத் தடைவிதிக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மட்டுமல், லொறிகள் செல்வதற்கும் தடைவிதக்கப்பட்டுள்ளது. யாழ்குடா நாட்டுக்கான உணவுப் பொருட்களை ஏற்றி வரும் லொறிகள் எவையும் தாண்டிக்குளம் தடைமுகாமைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. 350க்கும் மேற்பட்ட லொறிகள் தாண்டிக்குளம் தடைமுகாமில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என அறியப்படுகிறது. இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இரு லொறி உரிமையாளர்கள், தாம் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டுமென இராணுவத்தைப் பலமுறை கேட்டபோது, இராணுவத்தினர் அவர்களின் இரு லொறிகளுக்கும் குண்டுவைத்து அவற்றைத் தகர்த்து எரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க, செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக, கப்பல் மூலம் வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் விநியோகமும் தடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதனால் வடபகுதியில் அத்தியாவசியப் பொருட் களுக்குக் கூடப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலைகள் நான்கு மடங்குக்கும் மேலாக உயர்ந்துள்ளன. இதனால் இடம்பெயர்ந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.தாண்டிக்குளத்தைப் போன்று, மதவாச்சியிலும் நூற்றுக்கு மேற்பட்ட லொறிகள் வடபகுதிக்குச் செல்வதற்காகத் தவம் கிடக்கின்றன. லொறிகளைத் தடுத்து வைத்திருக்கும் படையினர் அவற்றைக் கோடரியால் கொத்தியும் சோதனையிட்டு வருகின்றனர். லொறிகளோடு செல்வதற்காகத் தவம் கிடக்கும் சாரதிகள், உதவியாளர்கள் படையினரால் துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர்.

## *காலிழந்த நிலையில் பெண்கள். சர்வதேசப் போர்விதிகளை மீறும் சிறீலங்கா இராணுவத்தின் மனித சித்திரவதைகள்.*

மக்களை இராணுவக் கவசமாக்கித் தமது இராணுவ நலன்களைப் பேணும், அனைத்துலகப் போர் விதிகளுக்கு எதிரான குற்றச் செயல்களிற் சிறீலங்கா பகிரங்கமாக ஈடுபட்டுவருகிறது. இந்த மனிதாயமற்ற சித்திரவதைகளை உடன்தடுத்து நிறுத்த அனைத்துலக அமைப்புக்கள் அக்கறை காட்ட வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் குரல் எழுப்பியுள்ளனர். இச்செயல்களாற் சிறீலங்காவுக்குத் தமிழ்மக்களை ஆளும் தகுதியில்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதியாகி வருகிறது. மட்டக்களப்பில், தோல்விகளை அடுக் கடுக்காகத் தழுவத் தொடங்கியுள்ள சிறீலங்காப் படைகள் பொதுமக்களைக் கொடுமையாகச் சித்திரவதைப்படுத்தி இனரீதியான தாக்குதல்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர்:

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த பின் சந்திரிகாவால் பிறப்பிக்கப்பட்ட பொருண்மியத் தடையால் மக்கள் கடும்பட்டினிக்கு உள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பின் முக்கிய பொருண்மிய வளங்களுள் ஒன்றான தென்னைகளை அழிக்கும் வேலையிலும் சிறீலங்காப் படைகள் வேகமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான தென்னைகள் சிறீலங்காப் படைகளால் வெட்டிச் சரிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. காடுகளை அழிக்கும் செயலில் வேகமாக ஈடுபட்டுள்ள சிறீலங்கா இராணுவம் பொதுமக்களை ஒலி பெருக்கிமூலம் பலவந்த சேவைக்கு உட்படுத்திக் காடுகளை அழிக்கிறது. சிறீலங்காப்படைகளால் மட்டக்களப்பில் தமிழ்ப்பெண் ஒருவர் பகிரங்கமான மானபங்கத்திற்கு ஆளாக்கப்பட்டதாகத் தெரிகிறது. மட்டக்களப்பில் மட்டுமல்ல, வவுனியாவிற் கூட மட்டக்களப்புப் பெண் என்ற காரணத்துக்காக இளம் பெண்ணொருவர் படைகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## திருகோணமலை மாவட்டத்தில் அழுத்தங்களின் மத்தியில்

மாலை மூன்று மணிக்குப் பின்னர் திருகோணமலை நகரின் முற்றவெளியில் சனக் கூட்டத்திற்குக் குறைவிருப்பதில்லை. முற்றவெளிக்கு அப்பால் கடற்கரை வரை ஓடித்திரியும் சிறுவர் கூட்டமும் ஐஸ்பழ வான்களும் முட்டாசுக் கடைகளும் என ஒரே கலகலப்பாக இருக்கும் அப்பகுதி இன்று வெறிச்சோடிப் போயுள்ளது.

புழுதி வாரி வீசும் காற்றுக்கு நடுவில் இராணுவத் தொப்பிகள் தான் வீதிகளில் தெரியும் நிலை இன்று அங்கேயுள்ளது.

படையினருடன் உலாவும் தமிழ்க் குழுக்களின் அட்டகாசம் மீண்டும் ஆரம்பித்துவிட்டது. ரெலோ குழுவினரை ஏற்றிக் கொண்ட இராணுவ வாகனங்கள் திருமலை வீதிகளில் ஓடித்திரிய ஆரம்பித்து விட்டது.

திருகோணமலை இந்துக்கல்லூரி, சென் ஜோசப்கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரி என அனைத்து பிரபல பாடசாலைகளினதும் உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவு மிகக் குறைந்து விட்டது.

தொழில் நிமித்தமோ, தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யவோ நகருக்குள் வரும் தமிழர்கள் தமது வேலை முடிந்ததும் வீடுகளுக்கு உடனடியாகத் திரும்ப ஆர்வம் காட்டுகின்றனர்.சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் சுதந்திரமாகத் திரிவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களுக்குப் படையினரும் பொலிசாரும் போதிய உதவிகளை வழங்கியும் வருகின்றனர்.

காலி, அம்பாறை, மாத்தறைப் பகுதிகளில் சிங்களவர்கள் எப்படி வசிக்கின்றார்களோ அதேபோன்று திருகோணமலையிலும் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்பு வலுத்து வருகின்றது. தமிழர்களின் இயல்பான வாழக்கையை வேண்டுமென்று பரப்பப்படும் வதந்திகளும் பாதிக்கின்றன. மாகாணசபைக் கட்டடங்களில் குண்டு வைக்கப்பட்டுள்ளது, என்றவாறாக பரப்பப்படும் வதந்திகள் மிகவும் வேகமாகப் பரவின.

உல்லாசப் பயணத்துக்கும் சுற்றுலாவுக்கும் பெரும் வரவேற்புப் பெற்ற திருகோணமலைக்குள் உல்லாசப் பயண ஹோட்டல்கள் வெறிச்சோடிப் போயுள்ளன. நிலாவெளி, கின்னியா பகுதிகளில் மருந்துக்குக் கூட மேற்கத்தைய நாட்டவர்களைக் காண முடியயவில்லை.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய 19ம் திகதி இரவு திருமலை நகரிலுள்ள உல்லாசப் பிரயாண ஹோட்டல்களில் சமார் 307 உல்லாசப் பயணிகள் இருந்தனர் அடுத்த நாள் காலையில் இவர்கள் அனைவருமே வெளியேறிவிட்டனர். இந்த ஹோட்டல்களில் சில தற்போது படையினர் தங்கும் விடுதிகளாக மாற்றப் பட்டுள்ளன. இராணுவத்தின் நகர நிர்வாகியின் (Town Commander) அலுவலகம் கூட ஒரு உலலாசப் பயண ஹோட்டலில் தான் இருப்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாம் ஈழப்போரின் பின்னால்...

விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளும் பூரணமாக நிறைவேற்றப் படாமைதான் மூன்றாவது ஈழப்போர் மூண்டதன் உடனடிக் காரணமாக இருப்பினும், இன்னும் ஆழமாக நோக்குமிடத்து, கடந்த நாற்பது ஆண்டு

கட்டங்களாகவும் வகைப்படுத்தப்பட்டன. ஒழுங்கமைக்கப்பட்டன. இந்த நிரல் படுத்தலின்படிதான– அன்றாடப் பிரச்சினைகள் என்ற தலைப்பின் கீழ்– புலிகளின் கோரிக்கைகளில் மூன்று இடம்பெறுகின்றன.

எனினும், புலிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்தனர். அதற்கு அவர்கள் மிகத் தெளிவான விளக்கத்தையும் கொடுத்தனர். ஏற்கனவே எமது மக்கள் நிறையத் துன்பப்பட்டுப் போனார்கள். நான்காண்டு காலமாகப் போரின் சுவாலைகளுக்குள் அவர்கள் வதங்கிப் போனார்கள். நாளாந்த சீவியத்தைப் போக்கவே அவர்கள் பட்ட கஷ்டங்களும் வேதனைகளும் சொற்களினால் விவரிக்க முடியாதவை.

இந்த நிலையில் அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலைதான். அரசியற் பிரச்சனையே அடிப்படைக்காரணியாக இருப்பினும், அதன் விளைவாக முளைவிட்ட அன்றாடப் பிரச்சனைகளால் தான்இன்று, அளவுக்கதிகமாக மக்கள் அவலப்பட்டுப் போய் நிற்கின்றார்கள். எனவே அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அன்டாடப் பிரச்சனைகளே முதலில் தீர்க்கப்பட வேண்டும். அரசியற் பிரச்சினையோடு ஒப்பிடும் போது அவை மிகமிக சாதாரணமானவையும் கூட. ஆனால், அரசியற் பிரச்சினை அப்படியானதல்ல: அது ஆழமானது: அகலமானது. சிக்கலான பரிமானங்களைக் கொண்டது: படை, அரசு, நிலம், நிர்வாகம், சட்டம் என்றவாறாகப் பல கூறுகளைக் கொண்டது. ஆகவே அரசியற் பிரச்சனை என்பது மிகச்சிக்கலானது. அதன் ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக அலசப்பட வேண்டியது. அவை ஆழமாக

இருந்தது. அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை தாமதப்படுத்தியது. காலத்தை இழுத்தடித்து நாட்கடத்தியது. மாறாக அரசியற் பிரச்சினைகளைப்பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு நயவஞ்சக நோக்கத்துடன் அவசரப்படுத்தியது.

இவ்வளவும் பழையகதை: உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்படையாகவே தெரிந்த சங்கதி. எல்லாருமே இவற்றை அறிவார்கள். ஆனால், சந்திரிகாவின் அரசாங்கமானது அன்றாடப் பிரச்சினைகளை இழுத்தடித்துக் கொண்டு, அரசியற் பேச்சுக்களை ஆரம்பிக்க அவசரப்படுத்தியதன் பின்னணியை விரிவாக ஆராயும் போதுதான் –

'மூன்றாவது ஈழப்போர்' ஆரம்பிப்பதை

### சந்திரிகா அரசின் சதி நோக்கம்

புலிகளுக்கு தவிர்க்கமுடியாததாக ஆக்கிய ஏதுநிலைகளும் காரணிகளும் புலனாகும். அரசு அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பின்னடித்தமைக்கும், அரசியல் பிரச்சி னைகளைப் பேச அவசரப் பட்டமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை இராணுவத் தீர்வுநோக்கிச்செல்லும் தனது சதி நோக்கத்தை எய்துவதற்கான தந்திர நகர்வின் ஆரம்ப அசைவுகளாக, அவ்விரண்டையும் அரசு செய்யதது.



**பேச்சுவார்த்தைகள்: திரைமறைவில் சதி**
இராணுவத் தீர்வை நாடும் சதிநோக்கத்தை நிறைவு செய்வதற்கான மூலத் தந்திரோபாயமாக, சந்திரிகா அரசு காலத்தை இழுத்தடித்தது.

காலமாக வேரோடிப்போயிருக்கும் சிங்களப் பேரினவாதச் சிந்தனைப்போக்கே அதன் அடிப்படைக் காரணம் என்பது புலனாகும். 'மூன்றாவது ஈழப்போர்' தவிர்க்க முடியாததாக மூண்டமைக்கான பின்னணியை விரிவாக அறிய விளையும் எவருக்கும் இலங்கை அரசியற் களத்தில் கடந்த ஆறுமாத காலமாக நிகழ்ந்த நகர்வுகளின் பின்னணியை தெளிவாக விளங்கிக் கொண்டலொளிய, அது சிரமமானதே.

நியாயமான அரசியல் தீர்வொன்றை வளங்க விரும்பாமை, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமை, காலத்தை இழுத்தடித்தமை, பேரினவாத சிந்தனையைக் கொண்டிரு–ந்தமை, போருக்குப் படைகளைத் தயார் படுத்தியமை போன்ற சந்திரிகா அரசினரின் செயற்பாடுகளிலிருந்து–

அரசின் கபடநோக்கத்தைப் புரிந்து கொண்டமையால், மீண்டும் யுத்தத்தின் பாதையில் செல்வது புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் தவிர்க்க முடியாமல் போய்விட்டது என்பதே உண்மையாகும்.

### நிபந்தனைகள் அல்ல: நிரல் படுத்தல்

தமிழ் மக்களின் நாளாந்த சீவியத்தின் மிது சிங்கள அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடையூறுகளும். விதிக்கப் பட்டிருக்கும் தடைகளும் நீக்கப்படாத ஒரு நிலையில்மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும்போது – பேச்சுமேசையில் கூடியிருந்து சல்லாபித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை என்ற தமது நிலைப்பாட்டை முதலாவது சுற்று சந்திப்பிலேயும், அதற்குப் பின்னான சந்திப்புகளிலும் புலிகள் இயக்கம் ஆணித்தரமாக வலியுறுத்தியது.

முதலில் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது எனவும், பின்பு அரசியல் பிரச்சினைகளை ஆழமாக அலசி அராய்ந்து தெளிவான முடிவொன்றைக் காணலாம் எனவும் புலிகள் முன்வைத்த கருத்தினை, அரசாங்கத்தினரும் ஏற்றுக்கொண்டபோது அவர்களது ஒப்புதலுடனேயே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்சொன்ன இரு

பூநகரியிலிருந்து படைத் தளத்தை நீக்கி, யாழ்ப்பாண மக்களுக்கு நிரந்தரமான ஒரு போக்குவரத்துப் பாதையினைத் திறப்பதடன், பொருளாதாரத் தடையையையும், கடல்வலயத் தடையையும் முழுமையாகவே நீக்கி வடபகுதி மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துமாறு, விடுதலைப்புலிகள் கோரியதானது–

அரசாங்கத்தினருடன் ஏற்கனவே காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு உடன்பட்டதேயன்றி– அவர்கள் ஒத்துக்கொண்டதன்பாற் பட்டதேயன்றி – அதற்கு முரணானது அல்ல. எந்த வகையிலும் புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவையும்கூட.எனினும்,

அந்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் மெல்லத் தளம்பியது: தடம்மாறியது. மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுவதில் பின்னடித்தது. வேண்டும் என்றே இழுத்தடித்தது. தமிழ் மக்களின் நலன்களில் எவ்வித அக்கறையுமற்ற தன்மையை வெளிப்படையாகவே இனங்காட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக பேச்சுவார்த்தைக்கான பழைய நிரல்படுத்தலை, புலிகள் இயக்கத்தின் புதிய நிபந்தனைகள் என அது உரைத்தது. அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு விடுதலைப் புலிகள் தொடர்ந்து வலிறுத்தியபோது, ஆரம்பத்தில் நிபந்தனையற்ற பேச்சுவாாத்தை என்று சொன்ன புலிகள், அப்பொத பேச்சுவாாத்தைக்கு நிபந்தனையிடுகிறாகள் என அரசு அபாண்டமாகக் குற்றம் சாட்டியது. அன்றாடப் பிரச்சனையைத் தட்டிக்கழித்தது.

### அரசியல் பேச்சுக்களில் நாட்டம்.

இத்தகைய குற்றச் சாட்டுக்களைப் புலிகள் மீது சுமத்திக்கொண்ட அரசாங்கமானது, அரசியற்பிரச்சினைகளைப் பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு புலிகளுக்கு அழைப்புவிடுக்கத் துவங்கியது. அதனை அவசரப் படுத்தியது. இரு பிரச்சினைகளையுமே சம காலத்தில் பேசித் தீர்வுகாணுவோம் எனச் சாட்டுச் சொன்னது.




எல்லோரும் ஏறின குதிரையில்...

ஆராயப்பட்டு தீர்வு காணவேண்டியவை. இவை உடனடியாக சாதித்துவிடக் கூடிய காரியங்கள் அல்ல இவற்றை ஆறுதலாகப் பேசி நிரந்தரமான தீர்வுக்கான ஒரு திட்டத்தை தயாரிப்பதற்கும், அந்தத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் மிகமிக நீண்டகாலம் செல்லும் என்பது வெளிப்படையான விபரம். இதுவரை சொல்லொனாக் கஸ்டங்கள் பட்ட மக்கள் தொடர்ந்தும் துன்பத்துக்கு உள்ளாக தாம் அனுமதிக்க முடியாது என்பதைப் புலிகள் தெளிவுபடுத்தினர்: எனவே அன்றாடப் பிரச்சனைகளை முதலில் தீர்க்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால், சந்திரிகாவின் அரசாங்கமோ அதில் அக்கறை அற்று இருந்தது: அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தபடி அசிரத்தையாக

புலிகள் இனங்காட்டிய அன்றாடப் பிரச்சினைகளை அவர்களின் நிபந்தனைகளாகக் காட்டி, அரசியற் பேச்சுக்களுக்கு வருமாறு வற்புறுத்தி பின்பு புலிகள் சரிவரமாட்டார்கள் என்று பிரசாரம் செய்து, உலகிற்குத் தன்பக்கம் அனுதாபம் வரச் செய்து, சர்வதேச உதவிகளைப்பெற்று படையமைப்பை புனருத்தாரணம் செய்து, அரசியற்பேச்சுக்கு ஒத்தழைக்காததால் இராணுவ வழிமுறையே புலிகளுக்கு உகந்தது எனச் சொல்லி மீண்டும் போரைப் பிரகடனப்படுத்துவதே சந்திரிகாவின் திட்டமாக இருந்தது.

(அடுத்த இதழில் தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகோதரிகளையிட்டு சஞ்சலமடையும் சங்காய் கலம்

**19.04.95 அன்று திருமலைத் துறைமுகத்துக்குள், "சூரயா", "ரணசுறு" அதிவேகப் பீரங்கிப்படகுகள் தகர்க்கப்பட்டபோது, அதே இறங்குதுறையில் தரித்துநின்று மயிரிழையில் தப்பிப் பிழைத்த, "ஜகதா" என்ற பெயருடைய அதிவேக பீரங்கிப்படகு, தனது உடன்பிறப்புகளின் சோகக்கதையை கண்ணீர்மல்க இங்கு விபரிக்கிறது.**

2ம் உலப்போர் முடிவுற்ற பின்னர் சீனாவில் உள்ள மிகப் பிரபல்யமானதும் கைத்தொழிலில் மாபெரும் வெற்றியைச் சீனாவுக்கு ஈட்டிக்கொடுத்த நகரமுமான 'சங்காய்' இல் அமைந்துள்ள கப்பல் கட்டும் நிறுவனமானது என்னையும் எனது உடன்பிறப்புக்கள் பலவற்றையும் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்தது. சீனக் கடற்படையின் தேவைக்கேற்ப இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட எமது பரம்பரையினரில், சில மாற்றங்களையும் அந்நிறுவனம் மேற்கொண்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எமது மூத்த சகோதரிகளுக்கு 'சங்காய் வகை-1' எனவும் இரண்டாவது உருவமைப்பான என்னையொத்தவர்களுக்கு 'சங்காய் வகை-2' எனவும், மூன்றாவது உருவமைப்புக்கு சங்காய் வகை-3' எனவும் அந்நிறுவனம் தனது பெயரைச்சூட்டியது. இரண்டாவது வழித் தோன்றல்களாகிய என்னையும் எனது சகோதரிகளில் பலரையும், சீனக்கடற்படையின் நதிக்காவல் ரோந்துப் பிரிவினர் பயன்படுத்தி வந்தனர். 127 அடி நீளத்தையும் 17 அடி அகலத்தையும் கொண்ட எமது எடுப்பான தோற்றமும், 131 தொன் நிறையுடைய எளிய உருவமும், எமது அழகினைப் பொலிவுறச்

**ஒவ்வொரு சகோதரியினது பெயரின் முதல் எழுத்துக் களையும் ஒன்று சேர்த்தால், அது சிறீமாவோவின் கணவரது பெயரை நினைவு படுத்தும் வகையில், திட்டமிட் டுப் பெயர் சூட்டப்பட்டிருந் தது.**

செய்தன. சீன நதிக்கரையோரத்தில் ரோந்தில் ஈடுபடும்போது ஒரு மணித்தியாலத்தில் 29 கடல்மைல்களைக்கடக்கக்கூடிய அளவு சக்தியையுடைய நான்கு டீசல் இயந்திரங்க-ளை நாம் எமது பிரதான இயந்திரங்களாகக் கொண்டுள்ளோம். அத்துடன் எதிரிப் படகுகளைத் தேடி அழிப்புச்செய்யும் எமது விசேட பணியின் பொருட்டு நாம் எமது பிரதான போராயுதங்களாக முன்னும் பின்னும் ஒவ்வொரு 37மிமீ. இரட்டைக்குழல் சீனப் பீரங்கிகளையும், எமது மேற் தளக்கின் நடுப்பகுதியில் இடதுபுறத்தில் ஒன்றும் வலதுபுறத்தில் ஒன்றுமாக, ஒவ்வொரு 25 மிமீ இரட்டைக் குழல் பீரங்கிகளையும் கொண்டுள்ளோம். இதைவிட விசேட போராயுதமாக நீருக்கடியில் உள்ள எதிரிகளையோ அல்லது அவர்களது உபகரணங்களையோ அழிப்பதற்காக நீரடியில் வெடிக்கக்கூடிய எட்டுக்குண்டுகளையும் (Depth Charges) எடுத்துவரக்கூடிய வசதியுமுண்டு. இவ்வளவு போரியல்சார் தகமைகளும், கம்பீரமான தோற்றமும், அதி ஆவகச் செயற்பாடுகளும், பாாப்போரைச் சட்டெனக் கவரக்கூடிய கவர்ச்சியும்,. ஆசியாவில் உள்ள ஏனைய கடற் படையினரை எம் பக்கம் கவர்ந்திழுத்தன. இவ்வாறு எமது கவர்ச்சியின் மீது ஆசைகொண்டவர்களில் 'சிறீலங்காக் கடற்படை' யும் ஒன்றாகும்.

1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறீலங்காவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து அந்நாட்டின் அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள், நாட்டின் முப்படைகளையும் பலப்படுத்தினார். இதன்போது அவர் சீனாவுடன் ஏற்படுத்திக கொண்ட நல்லுறவு ஒப்பந்தத்தின் விளைவாக சீன அரசு சிறீலங்காக் கடற்படைக்கு, எனது சகோதரிகளில் ஐவரை இலவசமாக வழங்கியது. சீனப்பேரரசின் கடற்படையில் சேவையாற்றியபோதே அந்நாட்டுப் பாரிய தாய்க்கப்பல்களின் எடுபிடிகளாகவே நாங்கள் கணிக்கப்பட்டுவந்தோம். ஆனால் சிறீலங்காக் கடற்படையுடன் இணைக்கப்பட்டவுடன் எனது சகோதரிகளுக்கு அமோக மரியாதையும், கௌரவமும், பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்ட போதிலும் சிறீலங்காப் பணத்தில் எங்கள் ஒவ்வொரு சகோதரிகளின் பெறுமதி 10கோடி ரூபா என்பதை அவர்கள் மறக்க வில்லைப்போலும்! 1972ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையில் முற்றாக இணைந்து கொண்ட எமது ஐந்து சகோதரிகளைப் பராமரிக்கவும், பயன்படுத்தவும் இலகுவாக அதிவேகப் பீரங்கிப் படகுகள் அணி (Fast Gun Boat Squadron - FGBS) ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.


ஒவ்வொரு சகோதரியினது பெயரின் முதல் எழுத்துக்களையும் ஒன்று சேர்த்தால், அது சிறீமாவோவின் கணவனாரது பெயரை நினைவுபடுத்தும் வகையில், திட்டமிட்டுப் பெயர் சூட்டப்பட்டிருந்தது. பெயருக்கேற்ற வகையில் தொடர் இலக்கமும் வழங்கப்பட்டிருந்தது. அவை பின்வருமாறு அமைந்தன.

**S - Sooraya - P 3140** (சூரயா)
**W - Weeraya - P 3141** (வீரயா)
**R - Ranakamee - P 3142** (ரணகாமி)
**D - Dakshaya - P 3143** (தக்ஷயா)
**B - Baalawatha - P 3144** (பாலவத்த)

காலப்போக்கில் எம் சகோதரிகளின் இலக்கம் மாற்றப்படவேண்டிய தேவை கருதி, அவற்றின் இலக்கங்கள் முறையே **P 310, P 311, P 312, P 313, P 314** என அமைந்தன. இவ்வாறு தமக்கென ஒரு இடத்தைச் சிறீலங்காக் கடற்படையில் பிடித்துக்கொண்ட எமது சகோதரிகளின் பிராதான கடமையாக, இலங்கைத் தீவைச் சூழ ரோந்தில் ஈடுபடுதலைக் குறிப்பிடலாம். ஒரு தீவைப் பொறுத்தவரை அதனது 'முன்னணிப் பாதுகாப்பு எல்லை' கடலாக இருக்கிற காரணத்தினால் இக் கடல் எல்லையைப் பாதுகாக்கும் எமது சகோதரிகள், சிறீலங்காவின் காவற் தெய்வங்களாக விளங்கினார்கள். இதனால் இவர்கள் பெருமையும் தலைக்கனமும் கொண்டு, சிறீலங்காக் கடற்பரப்பில் பயணங்களை மேற்கொள்ளும் சகல கடற்கலங்களுக்கும் மிரட்டல்காரிகளாக விளங்கினார்கள். சிறீலங்கா கடற்படை வீரர்களில் 30 - 35 பேர் கொண்ட 'கப்பற் குழுவினர்' எமது ஒவ்வொரு சகோதரியிலும் வசித்துக்கொண்டு, தமது கடமைகளை மேற்கொள்வார்கள்.

இவர்கள் அனைவரையும், என்னையும் நெறிப்படுத்தும் கப்பலின் 'ஆணையிடும் அதிகாரியாக 'லெப்டினட் கொமாண்டர்' தரத்தையுடைய அதிகாரி யொருவர் பணியாற்றுவார். இப்பதவியை இராணுவத்தில் 'மேஜர்' பதவிக்கு இணையானதாகக் கொள்ளலாம். தற்கொலைத் தாக்குதல் ஒன்றின் மூலம் கொல்லப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ, மற்றும் அராலிக் கண்ணிவெடியில் கொல்லப்பட்ட வடபகுதிக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் மொஹான ஜெயமகா உட்பட, தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான சமரசேகரா போன்ற தளபதிகள் எமது ஆணையிடும் அதிகாரியாவார்கள். அது மட்டுமன்றி சிறீலங்கா கடற் படையி னருக்கு எதிராக மிகவும் துணிச்சலோடும் தியாகத்திடத்தோடும் போராடிவரும் 'கடற்புலிகள்' எமது ஒன்றுவிட்ட உடன் பிறவா சகோதரியான 'சாகரவர்த்தனா' வை சென்ற வருடம் தாக்கியழித்தபோது அதன் கப்டனாக இருந்த, கடற்புலிகளால் கைது செய்யப்பட்ட கொமாண்டர் அஜித்குமார போயகொட கூட 1987ஆம் ஆண்டு எனது சகோதரியான 'வீரயா'வை வழி நடாத்தியுள்ளார்.

இவ்வாறு சிறீலங்கா கடற்படையில் சேவையாற்றி வரும் போது, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெவ்வேறு விபத்துக்கள் இரண்டில், எமது சகோதரிகளான 'தக்ஷயாவும், 'பாலபத்தவும்' கடும்சேதத்துக்கு உள்ளாகி, 1979ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறீலங்கா கடற்படையில் இருந்து விலக்கப்பட்டுக் கைவிடப்பட்டனர். எமது சகோதரிகளில் இருவரை இழந்ததையிட்டு நாம் பெரும் சோகமுற்றோம். இவர்களது இழப்பானது சிறீலங்காக் கடற்படைக்குப் பெரும் இடையூறாக இருக்கவே, 1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அவர்களது இடத்தினை ஈடுசெய்யும் பொருட்டு, சிறீலங்கா அரசு என்னையும் ஒரு சகோதரியையும் இருபது கோடி ரூபா பணம் கொடுத்து, சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டது. இந்தக் கொள்வனவின் போதுதான் நான் சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமானேன். எம்மையும் அதேயணியில் இணைத்த சிறீலங்காக் கடற்படை, 1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறீலங்காவின் அரசுத் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெவர்த்தனாவின் ஞாபகார்த்தமாக, அவரது பெயரின் ஆங்கில முதல் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எங்கள் இருவருக்கும் 'ஜகதா' (JAGATHA) 'றக்ஷக' (RAKSHAKA) எனப் பெயர்சூட்டி, தொடர் இலக்கங்களாக முறையே **P 3145, P 3146** எனவும் வழங்கியது. காலப்போக்கில் இவ்விலக்கமானது **P 315, P 316** என மாற்றம் செய்யப்பட்டது. எனவே 'சங்காயின்'




இரண்டாவது வழித் தோன்றல்களில், மொத்தம் ஐந்து பேர் மட்டுமே கடற்படைக்குச் சேவையாற்றிவந்தோம். எங்கள் ஐவருள்ளும் வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் நெடுங்காலமாகப் பணியாற்றிய சகோதரிகள் சூரயாவும், வீரயாவும் ஆவார்கள். 1983இல் வடபகுதியில் விடுதலைப் போர் தீவிரமடையத் தொடங்கியபின், வடபகுதிக் கடலிற் பயணம் செய்யும் அனேக படகுகள், இவ்விரு சகோதரிகளினாலும் தாக்குதலுக்குள்ளாகின. இதனால், இவ்விரண்டு சகோதரிகளும் அவர்கள் மத்தியில் பயத்தையும், பகைமையையும் உருவாக்கி மிகவும் பிரபல்யமடைந்தனர். சுருக்கமாகச் சொல்லப் போனால் சிறீலங்காவுடன் ஒன்றாக இருந்து தற்போது பிரிந்து போகும் தறுவாயிலுள்ள வடக்கு-கிழக்குப் பகுதிக் கரையோர மக்கள் அனைவருக்கும் 'வீரயா'வும், 'சூரயா'வும் பழக்கப்பட்டு, பின் ஒன்றாகச் சேர்ந்து 'வீரயா சூரயா' வாகத் திரிபடைந்திருந்தன. நட்பு ரீதியில் இல்லாமல் பகைமையில் உண்டான உறவு என்பதுதான் எமக்குக் கவலை தரும் விடயமாகும். இதற்கு எம்மை வழிநடாத்திய கடற்படையினரே பொறுப்பானவர்கள்.

விடுதலைப்போர் ஆரம்பித்துச் சில ஆண்டுகளின் பின் சிறீலங்கா கடற்படைக்கு எதிராகக் 'கடற்புலிகள்' எனும் சிறப்புமிக்க அணி உருவானது. அது சிறீலங்காக் கடற்படைக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இதனை உணர்ந்த சிங்களக் கடற் படையானது 1991இல் சங்காயின் மூன்றாவது

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமாகிவிட்டது

உண்மையில், கடற்புலிகளும் புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவினரும் ஒன்று சேர்ந்து, வடபுலத்தில் கடல் வான்வழி விநியோகங்களில் தங்கியிருக்கும் படை முகாம்கள் மீது, ஒரு இராணுவ பொருளாதார முற்றுகையை இட்டுள்ளனர் என்றல் அது மிகையாகாது.

மூன்றாவது ஈழப்போர் தொடங்கி வாரங்கள் முடிவடைந்து விட்டன. இந்தக் குறுகிய காலத்துக்குள் சிங்களப்படை 2 பீரங்கிக் கப்பல்களையும், அவ்ரோ விமானங்களையும் இழந்து விட்டது. அத்துடன் 300 இற்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர்-கணிசமான அளவு ஆயுதங்களையும் அது பறிகொடுத்து விட்டது. இந்த இழப்பு விபரம், இரண்டு நாடுகளின் முப்படைகளிற்கும் இடையே நடந்த முழு அளவிலான ஒரு போரின் விளைவுகளைப் போல் உள்ளன அல்லவா!

உண்மையில் முழுப்பரிமாணத்துடன் நடைபெறப்போகும் ஒருபெரும் போரைப்போலத்தான் மூன்றாம் ஈழப்போரானது அமையப்போகிறது. கடல்-வான் தரைகளில் இப்போர் தீவிரமடையலாம் என்பதை கடந்த இருவாரச் சண்டைகள் காட்டுகின்றன. அத்துடன் போர்முனைகளில் சில நிரந்தர முடிவுகள் ஏற்படப்போகும் காலப்பகுதியாகவும் இந்த ஈழப்போர் அமையலாம்.

## கிழக்குக் கடற்பிராந்தியத்தில் சண்டை

கடந்த 19ம் திகதி அதிகாலை திருமலைத்துறைமுகத்தினுள் புகுந்த நான்கு கடற் கரும்புலிகள், இரண்டு சிங்களக் கடல் ஓநாய்களை, அவற்றின் படுக்கையில் வைத்தே கொன்றுவிட்டனர். இந்தக் கடற் கரும்புலித் தாக்குதலின் இராணுவ பரிமாணம் இன்னொரு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

முன்னர் இரண்டாம் ஈழப்போரில் கடுமையான இழப்பைச்சந்தித்தது சிங்களக்கடற்படைதான். அதனுடைய கப்பல் பலத்தில் ஏறக்குறைய 15 வீதத்தை அது இரண்டாவது ஈழப்போரில் இழந்திருந்தது.

இந்த நிலையில் மூன்றாவது ஈழப்போர் தொடங்கிய அன்றே, சக்திவாய்ந்த இரண்டு அதிவேக பீரங்கிப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை சிங்களக்கடற் படையை வெகுவாக பாதித்து விட்டது எனலாம். இதனால், தமிழீழக் கடற் பிராந்தியம் மீதான சிங்களப் படையின் ஆதிக்கம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது

இடண்டாவது ஈழப்போர் காலத்திலேயே கடற்சண்டைகள் தீவிரமடைந்திருந்தாலும் கூட, கிழக்குக் கடற்பிராந்தியத்தில் ஒரு கப்பல். தகர்ப்பும் நடந்திருக்கவில்லை. சூரயா, ரணசுறு கப்பல்களின் மூழ்கடிப்பு கிழக்குக் கடற்பிராந்தியத்திலும் கடற்புலிகளின் ஆதிக்கம் விஸத்தரிக்க ப்பட்டுவிட்டதையே காட்டுகின்றது. இனிமேல் வடக்கு கிழக்கு, மேற்கு என்று தமிழீழத்தின் அனைத்துக் கடற்பிராந்தியத்திலும் கடற்புலிகளின் ஆதிக்கம் பெருக வாய்ப்புக்கள் உண்டு.

' சாகரவர்த்தனா ' கப்பல் தகர்ப்புடன் மேற்குக் கடலூடான கடல் விநியோகவழி பெரும் பாலும் மூடப்பட்டே கிடந்தது. தலைமன்னார் மற்றும் காரைநகர் படைத்தளங்களுக்கான விநியோகங்கள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய பின்னர், மீண்டும் அந்த பிரகடனப் படுத்தப்படாத கடல் தடையை கடற்புலிகள் ஏற்படுத்திவிட்டர்கள்.

இதேவேளை, பலாலிப் பெருந்தளம், வெற்றிலைக்கேணி, ஆனையிறவுப்படைத்தளம் மற்றும் முல்லைத்தீவு படைத்தளம் என்பவற்றிற்கு கிழக்குக் கடற்பிரா ந்தியத்தினூடகவே விநியோகங்கள் நடந்துவந்தன. வீரயா, ரணசுறு தகர்ப்புடன் கிழக்குக்கடல் விநியோக வழியும் சிங்கள படைக்கு வில்லங்கமான ஒரு விடயமாக மாறிவிட்டது.

கிழக்கு, மேற்கு கடல்வழி விநியோகங்களில் ஏற்பட்டுள்ள படைமுகாம்களின் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக மாற்றிவிட்டன.



விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப் பட்ட அவ்ரோ விமானம்

## வான் போரின் ஆரம்பம்

இரண்டாம் ஈழப்போரின் பிற்பகுதியில் வடபுல முகாம்களுக்கான கடல்வழி விநியோகத்திலேயே அது தங்கியிருக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எழுந்தது. படையினரின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் ஆயுத தளபாடங்களின் விநியோகங்களை வான்படையின் போக்கு வரத்து விமானங்களே செய்துவந்தன. அதாவது, வடபுல முகாம்களுக்கும் கொழும்புக்குமிடையேயான தொப்புள் கொடிபோல சிறீலங்காவின் விமானங்களே செயற்பட்டன.

இப்போது அதற்கும் பேராபத்து வந்துவிட்டது. கடந்த 28ஆம் 29ஆம் திகதிகளில் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவினர், குடாநாட்டின் வான்பரப்பில் வைத்து வான்படையின் இரண்டு 'அவ்ரோ' விமானங்களைச் சுட்டு வீழ்த்திய வரலாற்று நிகழ்ச்சியுடன், வடபுல வான்பரப்பில் சிங்கள படை விமானங்கள் பறப்பதற்கும் தடை வந்துள்ளது!

வடபுலத்திலுள்ள சிங்களப் படைமுகாம்களுக்கான தரை வழி விநியோகங்களை புலிகள் அறுத்தெறிந்த போது, தனது கடற்பலத்தைப் பயன்படுத்தி அம்முகாம்களைப் பயமின்றிப் பேணலாம் என்ற சிங்கள அரசின் முன்னைய நம்பிக்கைக்கு கடற்புலிகள் குறுக்கே நின்ற போது தனது வான்பலத்தை அதிகம் நம்பவேண்டிய நிலைக்கு சிங்கள அரசு வந்தது. ஆனால் இப்போது, அந்த நம்பிக்கைக்குக் குறுக்கேபுலிகளின் விமான எதிர்ப்புப் படை அணி வந்து நிற்கின்றது. விமானம் சட்டுவீழ்த்தப்பட்ட செய்தி கொழும்பைச் சென்றடைந்ததும், வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது விஜயத்தைச் சுருக்கிக்கொண்டு கொழும்பு திரும்பினார். திரும்பிய உடனேயே அமைச்சர் அவையையும் - படைத் தளபதிகளையும் அழைத்து மந்திராலோசனை நடத்தியதானது விமானங்கள் வீழ்த்தப்பட்டதன் அரசியல் இராணுவ முக்கியத்துவத்தை சாதாரண மக்களுக்கும் உணர்த்திவிட்டது.

இந்த நிலையில் மூன்றாவது ஈழப்போர் தொடங்கிய அன்றே, சக்திவாய்ந்த இரண்டு அதிவேக பீரங்கிப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை சிங்களக்கடற் படையை வெகுவாகப் பாதித்து விட்டது எனலாம். இதனால், தமிழீழக் கடற் பிராந்தியம் மீதான சிங்களப் படையின் ஆதிக்கம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது

உண்மையில், கடற்புலிகளும் புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவினரும் ஒன்று சேர்ந்து, வடபுலத்தில் கடல் - வான்வழி விநியோகங்களில் தங்கியிருக்கும் படைமுகாம்கள் மீது, ஒரு இராணுவ - பொருளாதார முற்றுகையை இட்டுள்ளனர் என்றல் அது மிகையாகாது.

யாழ்ப்பாணக் குடாநட்டை ஆக்கிரமிக்கும் பேராசையுடன் வடபுல எங்கும் குவித்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 50,000 படையினரது தேவைகளை, புலிகளின் கடல் - வான் முற்றுகைகளையும் மீறி, அரசால் நிறைவேற்றி வைக்க முடியுமா என்பது, அரசக்குத் தலையிடியைக் கொடுக்கும் ஒரு கேள்வி ஆகும்.

படையினருக்கான வான்வழி விநியோகம் தடைப்பட்டு விட்டது என்பது ஒருபுறம் இருக்க, போர்விமானங்கள் இல்லாத போர்முனையை சிங்களப் படைகளால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியது. ஏனெனில் டாங்கிகள் துணைக்குவர, போர் விமானங்கள் வானில் வட்டமிட, எறிகணைகளை மழைபோல வீசிக்கொண்டு போரிடும் மரபுவழிப் போர்முறைக்கே, சிங்கள சிப்பாய்கள் பழக்கப்பட்டவர்கள்: பழக்கப்பட்டவர்கள் என்பதைவிட அந்தளவு துணைப்பலமும் கிடைக்கும்போதே துணிவுடன் போராடும் மனநிலையைக் கொண்டவர்கள். எனவே, ஒரு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...



தாக்குதலுக்கு இலக்காகிய விமானப்படை, விமானத்தின் சிதைந்த பாகங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்



தமிழனே!
தாகத்துக்குத் தண்ணீர் தேடினோம்.
கானல் நீரே கண்ணுக்குத் தெரிந்தது.
அமைதிக் குஞ்சுக்காக
அடைவைத்திருந்தோம்.
கூட்டுக்குள்ளேயே எல்லாம் கூழாகிப் போனது.
பறந்து வந்த பருந்துக்கு விருந்து
வைத்தோம்.
எச்சத்தை எம்தலையில் இட்டுவிட்டு
எழுந்து போனது.
நாகபாம்புக்கு மகுடி ஊதினோம்.
நன்றாக ஆடிவிட்டு
நச்சுப்பற்களையே நமக்குக் காட்டியது.
மரங்கள் துளிர்த்து வசந்தம் வருமெனக்
காத்திருந்தபோது
அக்கினிக் காற்றின் அனலே வீசியது.
அழகிய கனவு கலைந்து விடுமென்று
விழிமூடிக்கிடந்தோம்.
கனவு மெய்ப்படவில்லையே.
பிச்சைவாங்குவதற்குப் பேரா பேச்சுவார்த்தை
மூச்சை அறுந்துவிட்டது.
இனிநூலை விட்டுக்கொடுத்தாலும்
பட்டம் எறாது.
மேடைக்குப் புதிய நடிகைவந்தாள்.
நல்ல நடிப்புடன் நாடகமாடினாள்.
கதையற்ற கலைப்படைப்பு என்பதால்
'பெரிய படிப்புக்காரி'யின் பொய்வேடம்
நீண்ட காலத்துக்கு நிலைக்கவில்லை.


இடைவேளையுடன் திரைவிழுந்தது.
ஈழத்தமிழர் ஏமாளிகள் என்றகதை
திருத்தியெழுதப்பட்டதை
அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை.
இனி அமைதிக்கு வந்த அன்னப்பறவை
குண்டு சுமந்துவந்து கொட்டும்.
கொட்டட்டும்.
விடுதலை நாற்று
குருதி நீரிற்தான் விளையுமென்றால்
இரத்தம் சிந்துவதற்கு என்ன பெயர்
தெரியுமா!
வரலாற்றுக்கடமை.
உயிர்விலை கொடுத்துத்தான் உரிமைபெற
முடியுமானால்
சாவுக்கு என்ன பெயர் தெரியுமா!
தலைமுறைக்கான விலைகொடுப்பு.
நேற்று: பேச்சென்ற போது
பெருமைப்பட்டவனே!
இன்று: போரென்ற போது மட்டும்
ஏன் பேசாமற் கிடக்கின்றாய்!
உலகப் பரப்பெங்கும் ஒதுங்கி வாழும்
தமிழனுக்கு
வேரிட ஒரு விளைநிலம் வேண்டும்.
அது தமிழீழமாக அமையட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# முரசு



# உலைக்களம்

முகவரியற்ற நாடோடிக் கூட்டமாக
தமிழன் முகமிழந்து போகக்கூடாது.
நிமிர்ந்த வாழ்வு வேண்டும்.
அது இங்கேயே முளைகொள்ளட்டும்.
சோழன் கதையும் எல்லாளன் கதையும்
மேடைக்கதைகள் ஆகக்கூடாது.
அவை நீளும் கதைகள் ஆகட்டும்.
காத்துக்கிடந்த காலம் விடிந்துள்ளது.
மூத்தமகனைக் கூப்பிட்டு முத்தமிடு.
கொற்றவையின் கோவிலுக்குக் கூட்டிப்போ.
நெற்றியில் திலகமிடு.
ஆனந்தக்கண்ணீர் வழிந்து முகம் நனைக்க
வழியனுப்பி வைத்துவிட்டு
களத்திலிருந்து வரும் செய்திக்குக் காத்திரு.
அடுத்த மகனுக்கும் அழைப்பு வரலாம்.
தாயே! எழுந்து முற்றத்துக்கு வா.
மகளுக்கு மஞ்சள் நீராட்டு.
உதிரிப்பூவை உச்சிமுகர்.
'அரியாத்தை'யின் அடுத்த வாரிசே!
மடிசுமந்த திருமகளை வழியனுப்பிவிட்டு
வாசலிலே. காத்திரு
எதிரியை எரித்துவிட்டுத் திரும்பிவருவாள்
குங்குமம் கரைத்து வைத்திரு.
ஆரத்தி எடுக்க வேண்டும்.
அறுபது வயது அப்புக்கு.
இது அழைப்பு.
போர்முரசம் கேட்கும் பொழுதில். இது என்ன!
சுருட்டா.. துக்கி எறி
கூச்சம் உனக்கெதற்கு!
ஆச்சியைக் கூப்பிட்டு அணைத்தவளை
முத்தமிடு.
காணி உறுதிகளைப் பேரனிடம் கையளித்து
நானிறந்தால் நீயென்று நாலுரும் கேட்கச்
சொல்.
மானம்போய். வீரம்போய்.
மண்டியிட்டு வாழ்வதிலும்
போராடிச்சாவதுவே பெருமைதரும்.
'அரைநாண்' கயிற்றை அவிழ்த்துக்கட்டு
இரைதேடும் புலியாக. எழுந்து வெளியேவா.
தங்கையே!
எங்கே போகிறாய்!
ரியூட்டரிக்கா!
சந்தோசம்.
நன்றாகப் படித்து டாக்டராகு.
நல்லமதிப்பு வரும்
புண்ணுக்கு மருந்திடுதல் புனிதம்.
ரணப்பட்ட
மண்ணுக்கு மருந்திடவும் வேண்டும்
மறக்காதே.
பல்லக்குத் துக்குதற்குப் படிப்பெதற்கு!
அடிமைக்கு அறிவிருந்தும் ஆவதென்ன!
தன்மானம் வேண்டுமடி தங்கைச்சி.
போடிக்கொண்டு படி.
படித்துக்கொண்டு போராடு.
நில்லடா தம்பி!
உன்னை நிறுத்துவிற்றாலுங்கூட
நல்லவிலைக்கு நாளைக்கே விற்கலாம்.
பத்துப் பனைமரத்தைக் கட்டிஇழுத்துக்
கொத்தியடுக்கவல்ல. கொழுத்தபருவத்தில்
சும்மா திரிகின்றாய்.
முகத்திலும் நெஞ்சிலும் உனக்கு
மயிர்முளைத்தது ஏன்!
வேண்டுமடா தம்பி வீரம்.
மானம் பெரிது.
பார்! வாசல்வரையும் எதிரி வந்துள்ளான்.
நீகுடித்த தாயின் முலையில்
தண்ணீரா இருந்தது!
போ! நீயே! புயல்
எழுந்து போராடு!
கதவை அகலத்திறந்து
பேச்சுக்குக் காத்திருந்தோம்
வாசலுக்கு எவரும் வரவில்லை.
வந்தவர்களும்
புச்சிபிடிக்கும் அதிகாரங்கூட அற்றவர்கள்
காலக்கெடு மீளக்கொடுத்தால்
ஜாலக்காரிக்கு. அது வாய்ப்பாகிவிடும்.
போர்முரசு முழங்கிப் படை புறப்பட்டாச்சு
வாழ்வதானால் எல்லோரும் வாழுவோம்.
வீழ்வதானாலும் எல்லோரும் வீழுவோம்.
இரண்டுக்கும் வரலாறு இருக்கும்
எவனாவது எழுதுவான்.

**வியாசன்**



www.tamilarangam.net



# மட்டு.தரவைக் குளம்...

தப்பிய படையினரை மீட்கச் சென்ற உலங்கு வானூர்தி யொன்றும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி யின் தாக்குதலுக்கு இலக்காகிக் கடுஞ் சேதம் அடைந்ததாகவும் செய்திகள் மேலும் தெரிவிக் கின்றன.

விடுதலைப்புலிகள் இராணுவ முகாமை தாக்கியழித்துக் கொண்டிருந்த வேளையில் காடு களுக்குள் தப்பியோடிய படை யினரை காப்பதற்கு வந்த இராணுவ அணியும் விடுதலை ப்புலிகளின் இன்னொருஅணியினால் இடைமறித்துத் தாக்கப்பட்டது.

இதைவிட இம் முகாமிலிருந்து தாக்குதலின் போது தப்பியோடிய படையினரைத் தேடியழித்தல் நடவடிக்கையின்போதும் பெருஞ் சண்டையிடம் பெற்றது. இதில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

# அனைத்துலக நகரெங்கும்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி.)

அரசு, தமது தவறை மறைப்ப தற்கு விடுதலைப் புலிகளே மோதல் தவிர்ப்பினை முறித்தனர் என்ற அப்பட்டமான பொய்ச் செய்திகளை அனைத்துலகமெங் கும் வேகமாகப் பரப்பி வரு கின்றது.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடி யாமல் தடுமாறும் தமது படையினருக்கு உற்சாகமூட்டு வதற்காகவும், அப்பாவிச் சிங் களப் பொதுமக்கள் தமது இளம்பிள்ளைகள் பலியாகிறார்கள் என்பதினால் வெளிப்படுத்தும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்காக வும் அனைத்துலக நாடுகள் எல்லாம் தமக்கு ஆதரவும், ஊக் கமும் அளித்து வருவதாகச் சிறீலங்கா செய்திகளை வெளியி ட்டுள்ளது.

'உலகநாடுகள் எமக்கு இராணுவ நடவடிக்கைக்கு என தளபாட உதவிகள் உட்படப் பல உதவி- களை வழங்க முன்வந்துள்ளன. ஆயினும் இராணுவ இரகசியம் கருதி எந்த நாடுகள் என்ன என்ன தர உள்ளன என்பதை வெளியிடமாட்டோம்" எனச் சிறீலங்காவின் நீதி அரச- 'யலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் கூறியுள் ளார்.

பீரிசின் இந்த செய்தியாளர் மாநாட்டுக் கருத்து தமிழரி டையே அதிர்ச்சியைத் தோற்று வித்துள்ளது. பீரிசின் கூற்று உண்மையாக இருந்தால் உலக நாடுகளுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூறிச் சிறீலங்காவின் போலிநாடக முகமூடியைக் கிழி த்தெறிய வேண்டிய பொறுப்பு தம்முடையது என்பதை உண ரும் அனைத்துலகத் தமிழர் களும் ஆனி முதல் வாரத்தில் தாம் புலம்பெயர்ந்துள்ள நாடுக ளில், பிரமாண்டமான பேர ணிகளை நடாத்தவுள்ளனர். அதன் மூலம் தமிழீழ மக்கள்மீது இன்று சிறீலங்கா அரசு நடாத்தி வரும் இன அழிப்புக்களையும், மற்றும் மனிதஉரிமைமீறல் களையும், விடுதலை ப்புலிகள் மீதும் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரன் மீதும் கொண்டுள்ள அபி மானத்தினையும் பகிரங்கப்படுத த் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையே பீரஸ், சிறீலங்கா படையினர் தமிழர்களது உட மைக்கும் உயிருக்கும் ஏற்படு த்திவரும் அழிவுகளைச் 'சகஜம்' எனக்கூறி பகிரங்கமாகவே நியா- யப்படுத்தவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகரையில் புலிகள்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

தொலைக்காட்சியில் உரையா ற்றிய சில மணி நேரத்திலேயே மேற்படி தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளதாக அச்செய்தித் தாபன ங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

**மட்டக்களப்புத் தாளங்குடா வில் இருஇராணுவத் தினர் பலி**

24.05.95இல் மட்டக்களப்பில் உள்ள தாளங்குடா என்ற பகுதி யில் ரோந்து சென்ற இராணுவத் தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட் டனர். பலர் படுகாயமடைந்தனர். தாளங்குடாவில் 24 மணித்தியால ங்களில் விடுதலைப் புலிகள் நடாத்திய இரண்டாவது தாக்கு தலே இது என அறியப்படுகி ன்றது. இத்தாக்குதலுக்குப் பழிதீர்க்கும் முகமாக, இராணுவ த்தினர் தமிழ்ப் பொதுமக்கள் மீது நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில், மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

கிழக்கில், பாதுகாப்பு அமைச்சின் பணிப்பின் பேரில் உசார் நிலை யில் வைக்கப்பட்டுள்ள படையி- னர், விடுதலைப் புலிகளிடம் தோல்வியைத் தழுவும் போதெ ல்லாம், தென்தமிழீழ மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு, இனஅழிப்புச் செய் வதில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர். கொல்லப்படும் பொதுமக்கள் யாவரும் விடுத லைப் புலிகளே என சிறீலங்கா அரசு பொய்யான பிரசாரங்களைச் செய்தும் வருகின்றது.

# வடமராட்சிப்பகுதியில் இராணுவம்

வடமராட்சி வடக்குக் கடற்பிராந்தி யத்தில் ரோந்து சென்ற சிறிலங்காக் கடற்படையினர் கடலிற் காணப் பட்ட மீனவர்களின் படகுகளைத் துரத்தித் துரத்திச் சுட்டனர். காங்கேசன்துறையில் இருந்து ஒரு பெரிய கப்பலுக்குப் பாதுகாப்புக் கொடுத்து வெற்றிலைக் கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது 3 டோரா படகில் வந்த படையினரே இவ்வாறு சரமாரியா- கச் சுட்டனர். படையினரின் இத்தாக்குதற் சம்பவத்தையடுத்து மீனவர்கள் கடலிற் குதித்து ஒருவாறு கரைக்கு வந்தனர்.

இக்கடற்பரப்பிற் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை கடந்த இரண்டு தினங்களாக அதிகரித்து ள்ளது. இதேவேளை பலாலியில் நிலை கொண்டுள்ள படையினர் நதியாயில் குடியிருப்புப் பகுதிகள் மீது அடுத்தடுத்துச் செல் தாக்குதலை மேற்கொண்டனர். மற்றும் வல்லை வெளிப்பகுதியி லும் செல்கள் விட்டு விட்டு ஏவப்பட்டு வருகின்றது. படையி- னர் உடுப்பிட்டிச் சந்திக்கும் வல்லைச் சந்திக்கும்இடையில் இருக்கும் பாகத்தை இலக்கு வைத்துத் தாக்குதலை மேற் கொண்டு வருகின்றனர்.

# போராளி வீரச்சாவு

திருகோணமலை மாவட்டத்திற் புல்மோட்டை மக்கள் குடியிரு ப்புப்பகுதிகளில் சிறிலங்கா இரா ணுவத்திற்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின் போது, போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். 2வது லெப்டினன் சுந்தர நடராசா உதயகுமார், கனகபுரம், கிளி- நொச்சி, இலக்கம் 29 ஆனந்தபுரம். இவருக்கு விடுத லைப்புலிகள் தமது வீரவ ணக்கத்தைச் செலுத்துகின்றனர். மேற்படி மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்ப ட்டிருக்கலாமெனத் தெரிகின்றது. மோதலின் பின் வழமைபோல இராணுவத்தினர் சுற்றாடல் பொதுமக்களைக் கண்மூடித்தன மாகத் தாக்கியுள்ளனர்.

# முழுஅளவிலான போர்....

அவசியமும் இல்லை'

இவ்வாறு சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா ரூபவாகினி தொலைக்காட்சி மூலம் சிறீலங்கா மக்களுக்கு விடுத்த செய்தியில் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் சிறீலங்காவுக்கு ஆதரவான ஆயுதத் தமிழ்க் கும்பல்களுடனும் இதொகா, மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுடனும் கூட்டாகச் சந்திப்பொன்றை நடாத்திய சந்திரிகா இந்திய பாணியிலான அதைவிடச் சற்றுக் கூடுதலான அதிகாரங்கள் கொண்ட அதிகாரப் பகிர்வொன்றை ஐக்கிய இலங்கைக்குள் கொண்டுவருவதே தனது அரசியற் தீர்வுத் திட்டமெனத் திருவாய் மலர்ந்துள்ளார்.

இந்தியாவே சமஸ்டி ஆட்சி அமைப்புள்ள நாடு. சிறீலங்காவோ ஒற்றையாட்சிப் பேய் பிடித்த நாடு. நிலைமை இப்படியிருக்க, சிறீலங்காவுக்குள் இந்தியப் பாணியிலான தீர்வு, அதைவிட கூடுதல் அதிகாரம் என்பதெல்லாம் தமிழர்களுக்கும் அனைத்துலகுக்கும் காது குத்தும் கைங்கரியம் தான் என்பது அரசியலமைப்பு ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

இந்த அரசியல் தீர்வு என்னும் போலிப் போர்வையைத் தமிழர்கள் மேல் போர்த்துவதற்கு விடுதலைப் புலிகளைக் கெஞ்சியோ, மிஞ்சியோ காரியத்தை முடித்திவிட வேண்டுமென்பதுதான் சந்திரிகாவின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக் கொள்கையாக அன்றும், இன்றும், என்றும் இருக்கிறது எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

**இராணுவக் கட்டமைப்பு மாற்றம்**

சந்திரிகா இராணுவக் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து தனது அதிகாரத்தைச் சிறீலங்கா இராணுவத்துள்ளும் உறுதிப்படுத்தி வருவதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் அமுசெனிவிரத்தினா பதவி நீக்கப்பட்டுப் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ரோகன் தலுவத்த நியமிக்கப்பட்டுள்ளார். மணலாறு பிராந்தியத்துக்கான தளபதியாகப் பிரிகேடியர் சானக பெரேராவும் இராணுவத் தலைமையகத்தின் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளராகப் பிரிகேடியர் லியனகேயும் நியமிக்கப்பட்டுள்ளனர். இராணுவச் செயலாளர் பதவியிலிருந்த நளின் அங்கமன இடமாற்றப்பட்டு இவ்விடத்துக்குப் பிரிகேடியர் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். இப்புதிய மாற்றங்களில் சந்திரிகாவின் உறவினர்கள் நண்பர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

சிறீலங்கா இராணுவத்துள்ளும் உறுதிப்படுத்தி வருவதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் அமுசெனிவிரத்தினா பதவி நீக்கப்பட்டுப் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ரோகன் தலுவத்த நியமிக்கப்பட்டுள்ளார். மணலாறு பிராந்தியத்துக்கான தளபதியாகப் பிரிகேடியர் சானக பெரேராவும் இராணுவத் தலைமையகத்தின் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளராகப் பிரிகேடியர் லியனகேயும் நியமிக்கப்பட்டுள்ளனர். இராணுவச் செயலாளர் பதவியிலிருந்த நளின் அங்கமன இடமாற்றப்பட்டு இவ்விடத்துக்குப் பிரிகேடியர் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். இப்புதிய மாற்றங்களில் சந்திரிகாவின் உறவினர்கள் நண்பர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

# தீர்வுத்திட்டத்தை வெளியிட்டால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆனால் சந்திரிகா வாயால் வெளி யிட்ட தீர்வுத்திட்டத்தின் அடிப்ப டையின்படி, கிழக்கைத் துண்டி த்து ஒற்றையாட்சி அமைப்பினுள் தீர்வைக் காண்பதுதான் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டு ள்ளனர். அமைதிப் பேச்சுவார்த்தை அரசின் கால இழுத்தடிப்பினால், 'கோமா' நிலையை அடைந்திருந்தபோது விடுத லைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், 'தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் பாரதூர மான இராணுவ விளைவுகள் ஏற்படும்' எனச் சந்திரிகா குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்று இரா ணுவ விளைவுகளைக் காரணம்காட்டி, சமாதானப்பேச்சைக் கொச்சைப்படுத்திய சந்திரிகா, இன்று சிங்கள மக்களைக் கிள்ளி விட்டுத் தமிழ்மக்கள் மீது பெரும் வன்முறை ஒன்றையும் ஏவிவிடத் துடிக்கின்றார் என்பதையே அவரது தற்போதைய பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றன. அதுமட்டுமல்ல, 'போரை நிறுத்தி சமாதானச் சூழலை ஏற்படுத்துவேன்" என்று சிங்கள மக்களுக்குத் தேர்தலின்போது வாக்கு றுதி அளித்துப் பெரும் வெற்றிபெற்ற சந்திரிகா அம்மையார் தன் வாக்குறுதிகளுக்கு மாறாக நடந்து கொண்டது மட்டுமல்லாமல் இன்று தனது போலிநாடகத்தின் உச்சக்கட்ட மாக 'தரவிருந்தேன் தப்பிவிட்டீர்' எனக் கதையளக்கின்றார். பேச்சு! போச்சுதாம் போரென்றானதாம். ம—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிவகுமாரன் பற்றிய சில வாழ்க்கைக் குறிப்புக்கள்

**சிறீலங்காவின் கூலிப்படைகள் தமிழீழம் எங்கும் தமிழ் இளைஞர்களை வேட்டையாடித் திரிந்த காலம் அது சொந்தப்பிழைப்புக்காக, எம்மினத் -தையே சிங்களக் கூலிப்படைகளுக்குக் காட்டிக்கொடுத்து. கீழ்த்தரமான அரசியல் நடாத்திய எட்டப்பர் கூட்டம் மலிந்த காலம். அந்தக் காலத்தில் அவனால் பலமான இளைஞர் சக்தியைத் திரட்டிக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவன் கொண்ட விடுதலைப் பற்று இன்னும் எம் மண்ணில் சத்தியாகிப் பற்றி எரிகிறது. அந்தவீரன் நெஞ்சில் மூண்ட தீ மண்ணில் ஓங்கி எரிந்து கொண்டுதானிருக்கிறது. அத்தகைய ஒருவீரனைப்பற்றியும், அவனது போராட்ட கால நாட்களைப் பற்றியும், அவன் சுமந்த வேதனைகள் பற்றியும் "களத்தில்" வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன். அவனது வாழ்க்கைக் குறிப்புக்களை இங்கு பிரசுரிக்கின்றோம்.**
**அந்த வீரன்தான் தியாகி சிவகுமாரன். அவன் இளைஞர்களுக்குள் அபூர்வமானவன். இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே,"கொழும்புக்கு அடிமையாக இருக்கும் தமிழன் அதிலிருந்து விடுபட வேணடுமே தவிர. அதற்காக டெல்லிக்கு அடிமையாகிவிடக் கூடாது !" என முழக்கமிட்டான்.**



## விடுதலைப் போரின் முதல் ஆகுதி

அப்போதுதான், நீண்ட காலத்தின் பின் மலேசியாவிலிருந்து தமிழீழத்துக்கு வந்த காரைநகரைச் சேர்ந்த 'பாரிஸ்டர்' அம்பலவாணர் என்பவர், தன்னை மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகச் சுலபமான வழி ஒன்றைக் கையாண்டு வந்தார். அது வேறொன்றுமல்ல. "தமிழர்களுக்கு சிங்களவர்களால் பாதுகாப்பில்லை. இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதிகளை இந்தியாவோடு இணைக்கவேண்டும்" என்ற கோசத்தை முன் வைத்து ஒரு இயக்கத்தை தொடங்கினார். அந்த இயக்கம் 'இந்திய இலங்கை இணைப்பு இயக்கம் என அழைக்கப்பட்டது.

பெரும் பணக்காரரான அம்பலவாணர், சில இளைஞர்களைப் பணத்தைக் கொடுத்து தன்னுடன் நிரந்தரமாகவே வைத்துக்கொண்டு ஊர் ஊராகக் கருத்தரங்கு நடத்தினார். தான் செல்லும் காரில் எடுத்துச் செல்லும் ஒரு மேசையை மேடையாக்கி, அதில் நாற்காலி போட்டு 'பெற்றோமாக்ஸ்' விளக்கையும் வைத்துக்கொண்டு அவர் மட்டும் அக்கருத்தரங்குகளில் பேசிவந்தார்.

தமிழ்நாட்டின் வீரப்பகவுண்டர் போல, விபூதிச்சாமியார் போல சுலபமான விளம்பரத்தைத் தேடுவதற்காக அந்த விளம்பரப் பிரியரான அம்பலவாணர், தந்தை செல்வநாயகத்தோடும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவோடும் இடைத்தேர்தல்களில் போட்டியிட்டு இரு தேர்தல்களிலும் கட்டுப்பணத்தைப் பறிகொடுத்தார்.

அவரது கருத்தரங்கு ஒன்று மயிலிட்டிக் கிராமத்தில் நடைபெற்றது. அப்போது ஓரளவு தலைமறைவாகத் திரிந்த சிவகுமாரன் அக்கிராமத்தில் இருந்தான். அக்கருத்தரங்குக்குச் சென்ற சிவகுமாரன், அம்பலவாணரின் விசமத்தனமான கருத்துக் -களைக் கேட்டுக் கொதிப்படைந்தான்.

தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலோ, அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளிலோ அக்கறை காட்டாது, தமிழ்ப்பகுதியை இந்தியாவோடு இணைத்தேயாக வேண்டும் என்ற கருத்தை மட்டுமே வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்த அம்பலவாணர் "யாழ்ப்பாணத்துக்கு இந்தியா பக்கத்தில் இருக்கின்றதா? கொழும்பு பக்கத்தில் இருக்கின்றதா? என்ற கேள்வியைக் கேட்டு அதற்கான பதிலையும் அவரேகூறி, எனவே தமிழர் பகுதி இந்தியாவோடு இருப்பதுதான் பாதுகாப்பு என்றார்.

உடனே ஆத்திரத்துடன் எழுந்த சிவகுமாரன், "படித்த நீர் ஏன் வீண் விதண்டவாதம் பேசுகிறீர்? உமது பாணியிலேயே கேட்பதானால் யாழ்ப்பாணத்துக்கு கொழும்பு கிட்டவா? டெல்லி கிட்டவா?

தென்கோடியிலுள்ள தமிழ்ப்பகுதியான திருக்கோவிலுக்கு கொழும்பு கிட்டவா? இந்தியா கிட்டவா? என்று கேள்வி மேல் கேள்வி எழுப்பினான்.

இலண்டனில் படித்து 'பாரிஸ்டர்' பட்டம் வாங்கிய அம்பலவாணரால் பதில் கூற முடிய வில்லை.

**டெல்லியைப்பற்றி 22 ஆண்டுகளுக்கு முன்னரே தெரிந்துவைத்திருந்த தீர்க்கதரிசி சிவகுமாரன்**

கருத்தரங்கு கலகலத்தது. கூடியிருந்த மக்கள் கலையத் தொடங்கினார்கள்.

"கொழும்புக்கு அடிமையாக இருக்கும் தமிழன் அதிலிருந்து விடுபட வேண்டுமே தவிர, அதற்காக டெல்லிக்கு அடிமையாகி விடக்கூடாது. இது போன்ற போலி வேடதாரிகளை விரட்டியடிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு சிவகுமாரனும் அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

அரசியலில் தெளிவு பெற்றிருந்த சிவகுமாரன் 22 ஆண்டுகளுக்கு முன்னரே தனது 23 ஆவது வயதிலேயே, டெல்லியின் ஆபத்தை நன்கு உணர்ந்திருந்தான்.

ஒரு தடவை நல்லூர்க் கந்தசாமி கோயில் திருவிழாவில் திரண்டிருந்த கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி, ஒரு சிங்களக் காவல்துறையினன் சில பெண்களிடம் முறைதவறிப் பேசித் தகாதமுறையில் நடந்துகொண்டான். அதைக்கண்டு பொறுக்க முடியாத சிவகுமாரன், அக்காவல துறையினன் மீது பாய்ந்து அவனை நையப் புடைத்தான். விளைவு சக காவல் துறைக்காரர்கள் அவனைக் கைது செய்து நல்லூர் கோயிலடியில் தற் காலிகமாக அமைக்கப் பட்டிருந்த காவல் துறை நிலையத்தில் கொண்டு சென்று அடைத்தனர். அங்கு கிடைத்த ஒரு இரும்புக் கம்பியைக் கையில் எடுத்த சிவகுமாரன், காவலுக்கிருந்த காவல்துறையினரை எல்லாம் தாக்கத் தொடங்கினான். நிலைமை மோசமாகவே பல காவல்துறையினர் சேர்ந்து கூடி அவனை மடக்கிப் பிடித்து 'ஜீப்' வண்டியில் ஏற்றி யாழ்ப்பாணம் காவல்துறை நிலையத்துக்குக் கொண்டு சென்று அவனைக் காவலில் வைத்தனர்.3 நாட்களில் அவனது தாயார் சென்று அவனைப் பிணை எடுத்து வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சோதனைகள் வரும் போது அவற்றைத் துணிவோடு சந்திக்கும் இயல்பு அவனுக்கு வரக்காரணம், அவனது தாயார் அவனுக்கு வழங்கிய உறுதுணையும், ஒத்துழைப்பும் என்றுதான் கூறவேண்டும். துரையப்பா கொலை முயற்சி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, இரண்டரை ஆண்டுகள் அவன் சிறையில் இருந்தபோது, அவனுக்காக வழக்கு நடத்த தமிழர் கூட்டணி (இன்றைய ரி.யு.எல்.எவ்)யைச் சேர்ந்த எந்த வழக்கறிஞர்களும் முன்வரவில்லை. தமிழர் கூட்டணித் தலைவர்களில் 75 வீதமானோர் சிறந்த வழக்கறிஞர்களாக இருந்தும் எவரும் முன் வராததால் இரண்டரை ஆண்டுகள் நீடித்த தன்மகனின் வழக்குக்காக தன்னிடம் இருந்த சொத்துக்களையெல்லாம் விற்றுச் செலவு செய்தார் சிவகுமாரனின் அன்னையார். தனக்கு மேலும் இரு பையன்களும், ஒரு பெண்ணும் இருந்த போதிலும் தனக்கென இருந்த ஒரே வீட்டை எதுவிதத் தயக்கமுமின்றி விற்றுச் செலவு செய்தார் அவனது அன்னை அன்னலட்சுமி அவர்கள்.

**கைத் துப்பாக்கியால் குறிதவறாது சுடுவதில் திறமையுடையவராகவும், தமிழீழ விடுதலைக்காக தலைமறைவு வாழ்க்கையில் இருந்தவரும், தன்னைப் போலவே துரையப்பாவைக் குறி வைத்திருந்தவருமான பிரபாகரனைச் சந்தித்து அவருடன் சேர்ந்து இயங்குவதற்கு சிவகுமாரன் பெரும் ஆவல் கொண்டிருந்தான். அது போலவே தூய்மை உணர்வும் உள்ள உறுதியும் கொண்டவர்களை மட்டுமே வைத்து விடுதலைப் போராட்ட அமைப்பொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த பிரபாகரனும் (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடங்கப்பட முன்னர்) சிவகுமாரனை சந்திக்க விரும்பினார். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர்களது சந்திப்பு நடக்கவில்லை.**

எப்போதுமே மீசை வைத்துக்கொள்ளாது முழு சவரம் செய்துகொள்ளும் அவன் முகம், குழந்தை முகமாகவே இருக்கும். ஆட்களுடன் பழகுவதிலும் அதே குழந்தைத்தனம்தான் அவனிடம் இருக்கும். ஆனால் அநீதிகள் முறைகேடுகளை எதிர் கொள்ளும்போது மட்டும் அவன் புலிபோல உறுமுவான்.

அப்பழுக்கற்ற சிறந்த போராளியாகத் திகழ்ந்த சிவகுமாரனால் ஒரு முழுமையான விடுதலை அமைப்பைக் கட்டி எழுப்ப முடியாது போய்விட்டது. போராட்ட நடவடிக்கையில் அவனுடன் பங்குபற்றி வந்த குழுவினர் எல்லோரும் அவன் போன்ற வீரம், ஒழுக்கம், கட்டுப்பாடு உள்ளவர்களாக இருக்கவில்லை. இயக்கம், போராட்டம் என்றாலே இளைஞர்கள் சேருவதற்குத் தயக்கம் காட்டிய காலம் அது. எனவே முன் வருபவர்களை வைத்துக்கொண்டு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவன் எண்ணினான்.

கைத் துப்பாக்கியால் குறிதவறாது சுடுவதில் திறமையுடையவராகவும், தமிழீழ விடுதலைக்காக தலைமறைவு வாழ்க்கையில் இருந்தவரும், தன்னைப் போலவே

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிவகுமாரன் பற்றிய சில...

துரையப்பாவைக் குறி வைத்திருந்தவருமான பிரபாகரனைச் சந்தித்து, அவருடன் சேர்ந்து இயங்குவதற்கு சிவகுமாரன் பெரும் ஆவல் கொண்டிருந்தான். அது போலவே தூய்மை உணர்வும், உள்ளஉறுதியும் கொண்ட வர்களை மட்டுமே வைத்து விடுதலைப் போராட்ட அமைப்பொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த பிரபாகரனும் (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடங்-கப்படுவதற்கு முன்னர்) சிவகுமாரனைச் சந்திக்க விரும்பினார். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர்களது சந்திப்பு நடக்கவேயில்லை.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, யாழ் நகரில் 1974 தை மாதம் 3ஆம் நாள் முதல் 9ஆம் நாள் வரை நடைபெற்றது. அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு, யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழறிஞர்கள் எல்லாம் கூடி மாநாடு நடத்துவதை விரும்பாததால் மாநாட்டுக்குப் பல இடைஞ்சல்களைச் செய்தது. வெளி-நாட்டிலிருந்து மாநாட்டில் கலந்துகொள்ள வந்த அறிஞர்கள் பலரை விமான நிலையத்தில் வைத்தே திருப்பியனுப்பியது. இருந்தபோதிலும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடத்தியே தீருவது என்று விடாப்பிடியாக மாநாட்டு அமைப்பாளர்கள் செயற்பட்டதனால் வரலாறு காணாத மக்கள் எழுச்சியுடன் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. சிவகுமாரன் அந்த மாநாட்டுத் தொண்டர் படையில் இணைந்து சிறப்பாகச் செயலாற்றினான். அவன் மாநாட்டுத் தொண்டர் படையில் பணியாற்றிய போதிலும் மாநாட்டு அமைப்பாளர்களிடமே மாநாட்டு ஒழுங்குகள் பற்றிய அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி வாதிட்டான். மாநாடு முடிந்ததன் பின் தொண்டர் படையில் சிறப்பாகப் பணியாற்றியதற்கான சான்றிதழ்களை மாநாட்டுக் குழுவிடமிருந்து பெற்றான் சிவகுமாரன்.

அந்த மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சியின் பின் மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பிரியாவிடைதரும் நிகழ்ச்சியாக தை மாதம் 10ஆம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு யாழ் மாநகராட்சியின் பொறுப்பில் இருந்த திறந்த வெளியரங்கை மேயர் அல்பிரட் துரையப்பா கொடுக்க மறுத்ததால் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் மேடையமைத்து நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு, யாரும் எதிர்பாராத அளவுக்கு மக்கள் பெருந்திரளாகக் கூடினர். அதைப் பொறுக்கமாட்டாத சிங்களக் காவல்துறையினர், அந்த மக்கள் கூட்டத்துக்குள் திடீரெனப் புகுந்து காவல்துறை அனுமதியின்றி மக்கள் வீதியை மறித்து இருப்பதாகக் கூறி, பொதுமக்கள் மீது கண்ணீர்புகைக் குண்டுகளை வீசி, தடியடி நடத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இச்சம்பவத்தில் 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த சிவகுமாரன், அந்தப் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த உதவிக் காவல்துறை அதிபர் (ஏ.எஸ்.பி) சந்திரசேகராவைப் பழிவாங்குவேன் என்று சபதம் எடுத்துக் கொண்டான்.

ஏற்கனவே தனது தாக்குதலிலிருந்து தப்பிய யாழ் மேயர் துரையப்பாவையும் விட்டு வைக்கக்கூடாது என்றும் சிவகுமாரன் தீர்மானித்தான்.

**அப்பழுக்கற்ற சிறந்த போராளியாகத் திகழ்ந்த சிவகுமாரனால் ஒரு முழுமையான விடுதலை அமைப்பைக் கட்டி எழுப்ப முடியாது போய்விட்டது. போராட்ட நடவடிக்கையில் அவனுடன் பங்கு பற்றி வந்த குழுவினர் எல்லோரும் அவன் போன்ற வீரம், ஒழுக்கம், கட்டுபாடு உள்ளவர்களாக இருக்கவில்லை. இயக்க போராட்டம் என்றாலே இளைஞர்கள் சேருவதற்குத் தயக்கம் காட்டிய காலம் அது. எனவே முன் வருபவர்களை வைத்துக் கொண்டு ஏதாவது செய்தாகவேண்டும் என்று அவன் எண்ணினான்.**

அதற்கிடையில் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலம் வீட்டுக்கு முன்னால் நின்ற காவல்துறையினர் மீது கைக்குண்டு வீசியதாக அவன் காவல்துறையால் தேடப்பட்டு தலைமறைவாக வேண்டி யேற்பட்டது.

மாநாட்டுப் படுகொலைகளுக்குக் காரணமாகவிருந்த யாழ்ப்பாணம் காவல்துறை அதிபர் சந்திரசேகராவைக் கொலை செய்யும் நோக்கோடு கைக் குண்டுகளைத் தயாரித்து சில இளைஞர்களின் துணையோடு யாழ் மணிக்கூண்டுக் கோபுரச் சந்தியில் சில நாட்களாகக் காத்திருந்தான் சிவகுமாரன். ஒரு நாள் 'ஜீப்' வண்டியைத் தனித்து ஓட்டிக்கொண்டு அந்த வழியாக வந்தான் சந்திரசேகரா. 'ஜீப்'பை வழிமறித்து கைக்குண்டு ஒன்றை சந்திரசேகராவை நோக்கி வீசினான் சிவகுமாரன். அவன் வீசிய குண்டு சந்திரசேகராவின் தோள்பட்டையில் தாக்கி இருக்கையில் விழுந்தது. ஆனாலும் அந்தக் குண்டு வெடிக்கவில்லை. உடனே சிவகுமாரன் தன்கையில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து சந்திரசேகராவை நோக்கிச் சுட்டான். துப்பாக்கியும் அந்த நேரத்தில் வேலை செய்யவில்லை. பக்கத்தில் நிறுத்தி வைத்திருந்த தோழனிடம் கத்தியைத் தரும்படி கத்தினான் சிவகுமாரன். ஆனால் பக்கத்தில் நின்றவன் எப்போதோ ஓடி விட்டிருந்தான். இல்லையேல் 'ஜீப்'பை விட்டு இறங்கிய சந்திரசேகராவை கத்தியாலேயே பதம் பார்த்திருக்கலாம். அருமையான சந்தர்ப்பம் நழுவிவிட்டது.

தான் தயாரித்த கைக்குண்டு வெடிக் காததற்கான காரணத்தை ஊகித்து உணர்ந்து கொண்டான். அவன் ஊகம் சரி என்பதை நிரூபிப்பது போல வெடிக்காத நிலையில் சந்திரசேகராவால் எடுத்துச் செல்லப்பட்ட குண்டு, யாழ் காவல் நிலைய யன்னலினூடாக வெயில் பட்டதும் ஈரலிப்பு நீங்கியதும் அங்கு எப்படியோ தட்டுப்பட்டு வெடித்து, காவல் நிலைய கட்டடத்துக்கு சிறு சேதத்தை ஏற்படுத்தியது. சிவகுமாரனால் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கும்படி கொடுக்கப்பட்ட கைக்குண்டுகளை அவன் தோழன் ஒருவன், ஈரலிப்பான இடத்தில் கொண்டுபோய் வைத்திருந்ததால் ஈரலிப்பு ஏற்பட்டு சந்திரசேகராவுக்கு எறிந்தவேளையிலும்கூட, அந்த ஈரலிப்பு இருந்ததால்தான் குண்டு வெடிக்கவில்லை. சந்திரசேகராவும் அதனால் தப்பிப் பிழைத்தான்.

அவனுடன் கூடச் சென்றவர்களின் தொடர்ச்சியான பல தவறுகள் அவனுக்கு போராட்டக் களங்களில் வெற்றி வாய்ப்பை கிடைக்காமல் செய்து வந்தன. இருந்த போதிலும் அவன் சோர்ந்து விடவில்லை.

அவன் ஊரிலேயே சாதிவெறி பிடித்த, சிறீலங்காக் சுதந்திரக்கட்சிக்காரனான பெற்றோல் நிலைய அதிபர் நாகலிங்கம் நடராசாமீது அவன் பார்வை சென்றது.

தமிழீழத்தைப் பற்றிக் கொண்டிருந்த தீண்டாமை நோயை அகற்ற அதற்கான பிரச்சாரங்களிலும் சமபந்தி போசனம் போன்ற நடவடிக்கைகளிலும் சிவகுமாரன் ஈடுபட்டதைக் கண்ட சாதிவெறியனான நாகலிங்கம் நடராசா, சிவகுமாரனையும் அவனுடன் கூட இருந்து செயலாற்றிய போராளிகளான தமிழ் இளைஞர்களையும் பற்றி காவல்துறையினருக்கு தகவல்கள் கொடுத்துவந்தான். அவனை விட்டு வைத்தால் தொடர்ந்து அப்பகுதியில் தாம் செயற்பட முடியாது என்பதை நன்குணர்ந்த சிவகுமாரன் மூன்று கைக்குண்டுகளைத் தயாரித்துக் கொண்டு, நேரே உரும்பராய் சந்தியில் உள்ள நடராசாவின் பெற்றோல் நிலையத்துக்குள்ளேயே புகுந்து அந்த மூன்று குண்டுகளையும் நடராசாவை நோக்கி எறிந்தான். மூன்று குண்டுகளுமே பெரும் சத்தத்துடன் வெடித்தன. பெற்றோல் நிலைய அறை எங்கும் பரவிய புகைமண்டலம் மூக்கை அடைத்தது. அங்கு கண்ணுக்கு எதுவுமே தெரியவில்லை. துரோகி தொலைந்தான் என்று சிவகுமாரன் திரும்பிவிட்டான்.

ஆனால் முதல் குண்டு வீசும் போதே மேசைக்கு அடியில் பதுங்கிய நடராசாவை மற்றைய இரண்டு குண்டுகளும் கூடத் தாக்கவில்லை. புகைமண்டலம் அடங்கியதும் தூங்கி எழுந்ததுபோல எழுந்து வெளியே வந்தான் நடராசா. சிவகுமாரனின் அந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை.

**தமிழர்களை அடிமைப்படுத்திவந்த சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக ஆயுத மேந்திப் போராடி முதற்களப்பலியான சிவகுமாரன் தான் எண்ணியவற்றை தன் வாழ்நாளில் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். ஆனால், அவன் ஈழத் தமிழர் விடுதலைக்காகவே உண்மையாகப் போராடியவன். தாயாரால் வீட்டில் "திரவியம்" என அழைக்கப்பட்ட சிவகுமாரன் உண்மையிலேயே தமிழினத்துக்கு தேடினாலும் கிடைக்க முடியாத திரவியம்தான்.**

நடராசாவின்மீது அவன் குழுவினர் மேற்கொண்ட இன்னொரு முயற்சியும் தோல்வியடைந்தது. கத்தியால் குத்தச் சென்றவர்கள் அவனை அரைகுறையாகக் குத்திவிட்டு, தாம் கொண்டு சென்ற சைக்கிளையும் பறிகொடுத்துவிட்டு மீண்டனர்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, துணிவு இவற்றுடன் முறையான பயிற்சியும் இல்லாதவர்களை அழைத்துச் செல்வதாலேயே தனது அனேகமான முயற்சிகள் வெற்றி பெறுவதில்லை என்பதை சிவகுமாரன் நன்குணர்ந்திருந்தான். ஆனால் அவனது தலைமறைவு வாழ்க்கை அவனுக்கு தகுதி யானவர்களைத் தேடிப் பிடித்து முறையான அமைப்பை ஏற்படுத்துவதற்குப் பெரிதும் தடையாக இருந்தது. எப்படியாயினும் தொடர்ந்து தமிழீழ விடுதலைக்காக இடைவிடாது ஏதாவது செய்யவேண்டும் என்ற வெறியே அவனிடம் குடி கொண்டிருந்தது.

காவல்துறையினர் சிவகுமாரனைக் கண்டுபிடித்து தகவல் தருபவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவித்து வேட்டையில் இறங்கியபோது, அவன் தலைமறைவாகி இனி காவல் துறையினரிடம் உயிருடன் அகப்படு வதில்லை என்றும் அப்படியான சூழ்நிலை ஏற்பட்டால் இறுதிவரை போராடி முடியாத நிலையில் நஞ்சருந்தி தன்னைத் தானே அழித்துக்கொள்வதாகவும் சபதம் எடுத்திருந்தான்.

காவல்துறையினரால் தேடப்பட்டு ஐந்து மாதங்களாக தலைமறைவாக இருந்த சிவகுமாரன், பாதுகாப்பு ஒழுங்குகளுக்காக ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது என்று அன்றைய தமிழர் கூட்டணி வழக்கறிஞரும் பின்நாள் யாழ்ப்பாணம் சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினருமான யோகேஸ்வரனிடம் ஆள் அனுப்பினான்.

பெரும் வசதி படைத்தவராக இருந்த யோகேஸ்வரன் தன்னிடம் பணம் இல்லை என்றுகூறி கை விரித்துவிட்டார். இந்த கவலை அறிந்த சிவகுமாரன் மிகவும் வேதனைப்பட்டான்.

"தலைவர்கள் என்போர் தீவிரவாதம் பேசுவதெல்லாம் வெறும் நடிப்புக்காகத்தான். சுயநலனுக்காக அவர்கள் தீவிரவாதம் பேசுவார்கள். ஆனால் உண்மையான தீவிரவாதிகளுக்கு அவர்கள் எவ்விதத்திலும் உதவமாட்டார்கள். அவர்களை நம்பி இனியும் ஏமாறக்கூடாது. எமது தேவைகளுக்கு நாமே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்" என்று தன் தோழர்களிடம் கூறிய சிவகுமாரன், தமக்கு அப்போது தேவைப்பட்ட ஆயிரம் ரூபாவை கோப்பாய் கிராமிய வங்கிக்குச் சென்று துப்பாக்கி முனையில் பெற்றுக் கொள்வது என்றும் பொது நலனுக்கான முயற்சிக்கு செலவு செய்வதற்காக அப்படிப் பணம் பெறுவதில் தவறில்லை என்றும் சிவகுமாரன் முடிவு செய்தான்.

அதற்காக அவன் 1974ஆம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் நாள் தன் தோழர்கள் சிலருடன் கோப்பாய் கிராமிய வங்கிக்குள் சென்றவேளையில், வங்கியின்முன் காவல் துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் அவனிடமிருந்த துப்பாக்கி ரவைகள் தீர்ந்ததும், காவல்துறையினரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காக தான் தயாராக வைத்திருந்த 'சயனைட்' நஞ்சை அருந்தி வீரமரணமடைந்தான்.

சிவகுமாரனது அந்தக் கடைசி நட வடிக்கையில்கூட, உடன்சென்றவர்கள் முழுமையாக அவனுடன் ஒத்துழைக்க வில்லை. காவல்துறையினர் சுற்றி வளைத்ததும் பலர் நின்று சண்டை பிடிக்காது தப்பி ஓடினர். துப்பாக்கி வைத்திருந்த தோழனொருவன் துப்பாக்கியை அருகே உள்ள கிணற்றுக்குள் போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டான். மகேந்திரன், ஜீவன் ஆகிய இருவர் காவல்துறையினரிடம் பிடிபட்டனர். சிவகுமாரன் மட்டும் தன்னிடமிருந்த

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



## சகோதரிகளையிட்டு சஞ்சலமடையும்...

வழித்தோன்றலான 'சங்காய் வகை-3' என்ற எமது சகோதர இனத்தினருள் மூவரை ஒவ்வொன்றும் 15கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்தது. இவர்களையும் அதே அணியில் இணைத்து, 1991ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் அரசுத் தலைவராக இருந்த ரணசிங்க பிறேமதாஸ அவர்களது ஞாபகார்த்தமாக, 'ரணசுறு' (RANASURU) 'ரணவிரு' (RANAWIRU) 'ரணரிசி' (RANARISI) என்ற பெயர்களைச் சூட்டி, அவற்றுக்கு முறையே P 320, P 321, P 322 என்ற இலக்கங்களையும் வழங்கியது. எமது மூன்றாவது பரம்பரைச் சகோதரிகளாகிய இவர்கள், எனது சகோதரிகளிலும் பார்க்க 7 அடி நீளம் கூடியவர்கள். ஆனால் அகலம் எனது சகோதரிகளின் அளவேயாகும். அதுமட்டுமின்றி, இதன் எடையும் 19தொன் கூடுதலாக உள்ளது. இவற்றைத்தவிர இதன் போராயுதங்களில் 'சங்காய் வகை-2' இல் உள்ள 25 மிமீ இரட்டைக் குழல் பீரங்கி பொருத்தப்பட்டுள்ள இடத்தில், சீன 14.5 மிமீ இரட்டைக்குழல் பீரங்கி பொருத்தப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர செயற்திறனிலும் மூன்றாவது வழித்தோன்றல்கள் சற்று விசேட தன்மையைக் கொண்டுள்ளன.

**விடுதலைப் போர் ஆரம்பித்து சில ஆண்டுகளின் பின், சிறிலங்காக் கடற்படைக்கு எதிராக "கடற்புலிகள்" எனும் சிறப்புமிக்க அணி உருவானது. அது சிறிலங்காக் கடற்படைக்கு பெரும் அஞ்சுறுத்தலாக அமைந்தது.**

இவ்வாறாக இலங்கையில் பெரும் புகழ்பூத்த நாங்கள், எல்லாத் தகமைகளிலும் சிறிலங்காக் கடற்படையினருக்கு அதியுச்ச சேவையைப் புரிந்து வந்தோம். ஒன்றைத்தவிர! அதுவென்னவெனில், எமது வடிவமைப்பானது அலைகள் அற்ற அமைதியான நீரிற் பயணம் செய்வதற் கேற்றவாறே முக்கியத்துவம் கொடுத்துச் சீனாவாற் செய்யப்பட்டது. அத்துடன் அதிவேகமாகச் செல்வதற்காக நீளம் கூடுதலாகவும், அகலம் ஒப்பீட்டளவில் மிகக்குறைந்ததாகவும் தயாரிக்கப்பட்டோம். இவ்வாறான பணிக்காகத் தயாரிக்கப்பட்ட எம்மை, சிறிலங்காக் கடற்படையினர் சிலவேளைகளில் கரையில் இருந்து 19கி.மீ.இற்கு அப்பால் உள்ள தமது 'தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதார வலயத்தினுள்' (Exclusive Economical Zone-EEZ) ரோந்தில் ஈடுபடுவதற்காகப் பாவிப்பார்கள். இந்தப்பகுதிக் கடலானது அலைகளாலும் நீரோட்டத்தாலும் கொந்தளிப்பான நிலையிற் காணப்படும். இதன் காரணமாக, எனது சகோதரிகள் இவ்விடங்களில் பயணம் செய்தால் உருளுதல் (Rolling), எத்துதல் (pitching) ஆகிய செயற்பாடுகளாற் சமநிலை குலைந்து, எம்மில் வசிக்கும் கடற்படையினருக்கு ஆபத்தைக் கூட விளைவிப்பார்கள். சிலவேளைகளில் எனது சகோதரிகள் முழுமையாகத் தலைகீழாகக் கவிழவும் (capsize) சந்தர்ப்பம் உண்டு. இதுவொன்றே எமது பயன்பாட்டிற் சிறிலங்காக் கடற்படையினர் எதிர்நோக்கும் முக்கிய குறைபாடாகும். இதன்விளைவாகவே எனது சகோதரிகளான 'ரணகாமி', 'பாலவத்த' ஆகியோர் விபத்தைச் சந்திக்க நேர்ந்தது. இவ்வாறு சிறிலங்காக் கடற்படைக்குச் சேவையாற்றி வரும்போது 19.04.1995 அன்று அதிகாலை, திரிகோணமலைத் துறைமுகப் பகுதிக்குள் நாங்கள் நின்று கொண்டிருந்த போது, கடல் அடியில் முழக்கம் கேட்டது. 'ரணசுறு', 'சூரயா' என்ற இரு சகோதரிகளும் கடலில் மூழ்கிவிட்டனர். "ஜகதா" என்ற பெயருடைய நான் மட்டும் தப்பிக் கொண்டேன். கடற் தெய்வம் என்ற ஒன்று இருக்கின்றது எனில், அதனிடம், கடற் கரும்புலிகளிடமிருந்து என்னைப் பாதுகாக்க வரம் கேட்கிறேன்.

# நீரடி நீச்சல் படையணியின் சாதனை

1995-04-19 அன்று தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் ஊடுருவித் தாக்கிச் சிறிலங்காக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு அதிவேக பீரங்கிப் படகுகளைக் கடற் கரும்புலிகள் தகர்த்தழித்துள்ளனர். இவ்வெற்றிகரமான தாக்குதலை விசேட படையணிகளான 'சுலோஜன்', 'அங்கயற்கண்ணி' நீரடி நீச்சற் படையணிகள்தான் மேற்கொண்டுள்ளன. விடுதலைப்புலிகளின் படைவளர்ச்சியில் மேலே கூறப்பட்ட சம்பவத்தின் 'இராணுவப் பரிமாணத்தை' எமது மக்களுக்கு எடுத்து விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரையில் அது மேற்கொள்ளப்படும் இடம், தாக்குதலை நடாத்துவதற்குத் தேர்ந்தெடுத்த சந்தர்ப்பம், நடவடிக்கையில் வெற்றியீட்டுவதன் பொருட்டு எம்மாற் குறித்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் இராணுவ வளம் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே இவ் வெற்றிகரமான நடவடிக்கையின் பரிமாணத்தை நோக்குவதற்கு, இவற்றைத் தனித்தனியே ஆராய்வதே பொருத்தமானதாகும்.

தாக்குதல் நடத்தப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினைப் பொறுத்தவரையில், தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையானது முற்றாகத் தமது கட்டுப்பாட்டிலேயே உள்ளதென எதிரி கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்ற அதேவேளையில் இங்கு அமைந்துள்ள துறைமுகமானது உலகிற் பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகமாகும். இரண்டாம் உலகப்போர்க் காலகட்டத்திற் பிரித்தானியப் பேரரசின் 'றோயல் கடற்படை' யாற் பனன்படுத்தப்பட்டுவந்த 'HMS High flyer' எனும் இத்தளம், 1957 ஒக்ரோபர் 15ஆம் திகதி, சிறீலங்காக் கடற்படையிடம் கையளிக்கப்பட்டது. தேவநம்பியதீச மன்னரின் நினைவாக இத்தளத்திற்குச் சிறீலங்காக் கடற்படை 'SLNS Tissa' எனும் பெயரிட்டுத் தளத்தைக் கிழக்குக் கடற் பிராந்தியத் தலைமையகமாக்கியதுடன், சிறீலங்காக் கடற்படையினர் கப்பல்கட்டும் நிறுவனத்தையும் கடற்படையின் பயிற்சிக் கல்லூரியையும் திருகோணமலையில் நிறுவியது. இவ்வாறு அன்று நிறுவப் பட்டவை அனைத்தும் வளர்ச்சியுற்று, சிறீலங்கா கடற்படையின் நடவடிக்கைகளுக்கான தலைமையகமாக இன்று விளங்குகின்றன. இதன் வேலைத் திட்டங்களாக சிறுரக கடற்படைப் படகுகளைக் கட்டுதல், சேவையிலீடுபடும் கலங்களின் திருத்தங்களை மேற்கொள்ளுதல். கிழக்குப் பிராந்தியக் கடற்பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். புதிதாகச் சேர்க்கப்பட்ட அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோருக்கான அடிப்படைப் பயிற்சிகள், துறைசார் பயிற்சிகள் என்பனவற்றை வழங்குதல் ஆகியவற்றுடன் அதிவேகப் பீரங்கிப்படகுகளின் அணி, மற்றும் அதிவேக தாக்குதற் படகுகளின் அணி என்பனவும் இங்குதான் நிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இந்தவகையில் இத் தாக்குதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மேலும் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமானது விடுதலைப்புலிகளின் இராணுவ வரலாற்றில் முக்கிய நிகழ்வென்றே கூறலாம். அதாவத இரண்டாம் கட்ட ஈழப்போரின் பின்னர் சந்திரிகா அரசுடன் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாத நிலையில், தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக்கூறிக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் காலக்கெடுவையும் விதித்தனர். புலிகள்விதித்த காலக்கெடுவினைக் கணக்கிலெடுக்காமல் இருந்த சந்திரிகா அரசுக்கு முதலாவதும் தெளிவானதும், வெற்றிகரமானதும், கரும்புலிகளால் நடத்தப்பட்டதுமான தாக்குதல் இதுவாகும். எனவே, இத்தாக்குதல் நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பமும் வரலாற்றுப் பதிவாகும்.



அடுத்ததாக இவ் வெற்றிகரமான தாக்குதலுக்காக விடுதலைப்புலிகளாற் பயன்படுத்தப்பட்ட இராணுவ வளமானது வியக்கத்தக்கதொன்றாகும். அதாவது, 1984ஆம் ஆண்டுக் காலப்பகுதியிற் சிறு தொகை உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட 'கடற்புலிகள்' எனும் சிறு பிரிவானது வளர்ச்சியுற்று 1991இல் விடுதலைப்புலிகளின் 'கடற்புலிகள்' எனப் பெயர் சூட்டப்பட்டு நடவடிக்கைகளிலீடுபடுத்தப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளிலெல்லாம் கடற்புலிகளின் பங்கு இன்றியமையாதது. அது மட்டுமன்றிக் கடற்புலிகள் செயற்படத் தொடங்கி ஓரிரு வருடங்களிலேயே பல வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு தமிழீழத்தின் குறிப்பிடக்கூடியளவு கடற்பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டிற் கொண்டுவந்துள்ளனர். இதனை எதிரிகளின் இராணுவ ஆய்வாளர்கூட இன்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆனால் உலகிற் பாரிய கடற்படைகளைக் கொண்டிருக்கும் நாடுகளைத்தவிர கடற்படையென்ற ஒன்றைக்கொண்டிருக்கும் அனைத்துச் சின்னஞ்சிறு நாடுகளும் கூட – அவை அளவிலும் ஆற்றலிலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும் – ஏதாவதொரு வகையிற் தமக்கென ஓர் விசேட படையணியைக் கடல் நடவடிக் – கையில் ஈடுபடுத்தப்படுவதற்காக உருவாக்கியுள்ளன. இவற்றில் குறிப்பிட்டுக் கூறக் கூடியவைகளாக – அமெரிக்கக் கடற்படையின் விசேட நடவடிக்கைக் குழுவான 'சீல்' (Seal) சோவியத் கடற்படையின் சிறப்புக்குழுவான 'ஸ்பெற்நாஸ்'(Septsnaz) பிரித்தானியக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான 'றோயல் மரீன்கள்' (Royal Marines) கிழக்கு ஜேர்மனியின் கடற்படை மற்றும் காலாட்படைச் சிறப்பணியின் 'ஏண்ஸ் மொறிற்ஸ் ஆண்ற்' (Ernts Moritz Arnd) போலந்த நாட்டுக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான 'லுசிக்கா' (Luzycka) இத்தாலி நாட்டுக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான 'கம்மா' (Gamma) மற்றும், சுவீடன் நாட்டுக் கடற்படையின் விசேட இடுபணிக் குழுவான 'றேஞ்சர்ஸ்' (Rangers) போன்றவை உள்ளன.

இவையாவும் வல்லரசு நாட்டுக் கடற்படையணிகளின் சிறப்பு நடவடிக்கைக் குழுக்களாக உள்ளபோதும் இவர்கள் அனைவரும் சாதாரண நீரடிச் சுழியோடிகளாகவும் செயற்படுகின்றனர். இவ்வாறான விசேட படையணியிலுள்ள

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் மருத்துவ பீடத்திற்கு தமிழர் விடுதலை கூட்டணி சாவு மணி அடிக்குமா?

## மருத்துவ மாணவர் ஒன்றியம் கேள்வி

யாழ் மருத்துவ பீட மாணவர்கள் நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பல்வேறு இடர்பாடுகளில் வட இலங்கை மருத்துவக் கல்லூரி விவகாரமும் முக்கியமானது. இது சம்பந்தமான மருத்துவ மாணவர்களின் நிலைப்பாடானது பல சந்தர்ப்பங்களில் விரிவாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது யாழ் மருத்துவ பீடத்துடன் வட இலங்கைத் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை இணைப்பதர்கு அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, யாழ் மருத்துவ பீட மாணவருக்கு ஏற்படக்கூடிய பின்னடைவுகளைத் தவிர்த்து மாணவர்கள் தொடர்ந்தும் அமைதியான சூழலில் தமது கல்வியைத்தொடர மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும், அதன் முதற்கட்டமாக யாழ் மருத்துவ மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பு சென்று மருத்துவக் கல்வி சார்ந்த அனைத்து அமைப்புகளுடனும், பல்வேறு அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியற் கட்சியுடனும் தொடர்பு கொண்டு நிலைமையைத் தெளிவுபடுத்தியது.

இதன்போது அகில இலங்கை மருத்துவ மாணவர் சம்மேளனம், அகில இலங்கை பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு ஆகிய மாணவர் அமைப்புகள் எமது நிலைப்பாட்டை ஆதரித்ததுடன் இது தொடர்பான தமது நிலைப்பாட்டையும் அரசிற்கு தெளிவுபடுத்தியுள்ளனர், அத்துடன் இத்தகைய முடிவுகள் பல்கலைக்கழக மாணவர்களின் இருண்ட காலம் மீளவும் தோன்றுவதற்கான சூழலை ஏற்படுத்தும் எனவும் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

மேலும் அரச, மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் தாய்ச்சங்கமும் அரசின் தற்போதைய நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டித்ததுடன் அதன் யாழ் கிளையை வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான எல்லாவிதமான கற்பித்தல் நடவடிக்கைகளிலுமிருந்து தொடர்ந்தும் விலகியிருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆளும் மக்கள் முன்னணியின் சுகாதார அமைச்சரும், பிரதிக்கல்வி அமைச்சரும் இந்தநிலைப்பாட்டுக்கு ஆதர்வு தெரிவித்ததுடன், ஜனாதிபதிக்கும் இது தொடர்பாகத் தெரியப்படுத்தி உள்ளனர் அத்துடன் எமது கல்வியை அமைதியாகத் தொடரப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதிக்கு பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கு மாறாக வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்களை எம்முடன் இணைப்பதால் எமக்கு ஏற்படக்கூடிய பின்னடைவுகளைக் கருத்திற் கொள்ள மறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திறமை அடிப்படையிலான இலவசக் கல்விக்கு எதிராகத் தம்மால் ஆரம்பிக்கப்பட்ட வட இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு மீளவும் புத்துயிர் கொடுக்க முயன்று வருகின்றனர்.

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி, மூளாயில் அரையும் குறையுமாக ஆரம்பிக்கப்பட்டபோதே இதன் நிச்சயமற்ற எதிர்காலம் குறித்து யாழ் மருத்துவ மாணவர் ஒன்றியம் எச்சரித்திருந்தது. இதன் பின்னரும் யாழ் மருத்துவ மாணவர்களே இவர்களுக்கான மாற்றுத்தீர்வை முன்வைக்க வேண்டுமென எதிர்பார்ப்பது விசனத்துக்குரியது. இருந்தபோதும் மருத்துவ மாணவர் ஒன்றியம் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரி, உதவி மருத்துவ அததிகாரி, உயர் தொழிநுட்பவியல் முதலிய கற்கை நெறிகளை இவர்களுக்காக சிபார்சு செய்திருந்தது.

இதேவேளை 22-4-95 அன்று கூட்டப்பட்ட யாழ் பல்கலைக்கழகப் பேரவையானது யாழ் மருத்துவபீடச் சபையினதோ, மருத்துவ மாணவர் ஒன்றியத்தினதோ சிபார்சு இன்றி வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்களை யாழ் மருத்துவ பீடத்துடன் இணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத்தீர்மானித்துள்ளது

எவ்வாறாயினும் திறமை அடிப்படையிலான இலவசக் கல்விக்கு எதிராகப் பணத்தையே அடிப்படையாகக் கொண்ட வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பின் கதவால் உள்வாங்குவதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. எமது கல்வியில் பின்னடைவுகளை ஏற்படுத்தும் இந் நடவடிக்கையை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சம்மேளனம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் முறியடிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கை எமக்கு எத்தகைய இடர்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதைப் பல்கலைக்கழக நிர்வாகம் தெளிவாக அறிந்திருந்தும் கூட மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றியமை வியப்புக்கும் வேதனைக்கும் உரிய விடயம்.

# சிவகுமாரன் பற்றிய சில...

துப்பாக்கியின் ரவைகள் தீருமட்டும் சண்டைபிடித்து இறுதியில் காவல் துறையினரிடம் உயிருடன் பிடிபடுவதில்லை என்ற சபதத்துக்கேற்ப தயாராக வைத்திருந்த சயனைட்டை அருந்தி உயிர் துறந்தான். தீவிரவாதம் பேசி நடித்த போலித் தமிழ்த் தலைவர்களாலும், கூடச்சென்ற சிலரது கோழைத்தனத்தாலுமே அன்று சிவகுமாரன்

> அவனது தியாக வாழ்வு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு வேகத்தையும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பேரெழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது.

உயிர் துறந்தான் என்பது வேதனையான உண்மை.

அவனது அவசரத் தேவைக்காக ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவ மறுத்தவர்கள் எல்லாம், அவன் மறைவுக்குப் பின் தம்பி சிவகுமாரன், தம்பி சிவகுமாரன் என்று முழங்கினர். இவ்வாறு முழங்கிய கூட்டணித் தலைவர்களின் போலித்தனம் சிவகுமாரனோடு பழகியவர்களுக்கு மட்டுமே அன்று முழுமையாகப் புரிந்தது.

அவன் வீரமரணமடைந்த யூன் 5ஆம் நாள் வரலாற்றில் ஏற்கனவே பல போராட்டங்களை ஈழத்தமிழர்கள் சந்தித்த, எதிர்கொண்ட நாளாகும். 1974ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் இலங்கை முழுவதிலும், தொழிலாளர்களால் பொது வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டு பல இடங்களிலும் தொழிலாளர் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

1974 யூன் 5ஆம் நாள் கொலன்னாவ எண்ணை சுத்திகரிப்பு ஆலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொது வேலைநிறுத்த தொழிலாளர்கள் ஊர்வலத்தை, காவல்துறையினர் வழிமறித்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட அரச லிகிதர் சேவைச் சங்கத்தின் உறுப்பினரான கந்தசாமி கொல்லப்பட்டார்.

1956ஆம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் நாள் பண்டாரநாயக்கா அரசால் தமிழ்மொழியை இரண்டாம் தர மொழியாக்கி, சிங்கள மொழியை மட்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்காகச் சிங்கள ஆட்சி மொழிச்சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

அன்று தமிழ்த் தலைவர்கள் எல்லாம் பாராளுமன்றக் கட்டடத்துக்கு முன் உள்ள காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்த வேளையில், சிங்கள இனவெறிக் குண்டர்களால் தாக்கப்பட்டனர்.

அதன்பின் ஒவ்வொரு யூன் 5ஆம் நாளும் ஈழத்தமிழ் மக்களால் துக்கநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு துக்கதினம் நடத்தப்பட்டு வருகிறது.

1974 ஆம் ஆண்டு யூன் 5ஆம் நாள் நிகழ்ந்த சிவகுமாரனின் வீரமரணத்துக்குப்பின், அந்த நாள் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான துக்க நாளாகவே ஆகிவிட்டது.

தமிழர்களை அடிமைப்படுத்தி வந்த சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி முதற்களப்பலியான சிவகுமாரன், தான் எண்ணியவற்றை தன் வாழ்நாளில் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். ஆனால் அவன் ஈழத்தமிழர் விடுதலைக் காகவே உண்மையாகப் போராடினான். தாயாரால் வீட்டில் "திரவியம்" என அழைக்கப்பட்ட சிவகுமாரன் உண்மையிலேயே தமிழினத்துக்கு தேடினாலும் கிடைக்க முடியாத திரவியம் தான். அவனது தியாக வாழ்வு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு வேகத்தையும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பேரெழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. அவனது மறைவுச் செய்தி கேட்டு தமிழ் மக்கள் அவன் உடல் இருந்த யாழ்ப்பாணம் மருத்துவமனையை முற்றுகையிட்டனர். மறுநாள் அவன் ஊரான உரும்பராயில் இருந்து சென்ற அவனது இறுதி ஊர்வலத்திலும், மயானத்திலம் நடைபெற்ற தகனக்கிரியையிலும் 50,000க்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். வெள்ளம் போல் திரண்டிருந்த தமிழ் மக்களின் அழுகை ஒலி வானைப் பிளந்தது. தமிழீழத்திலும் முதல் தடவையாக பெண்களும், மாணவிகளும் நடைமுறை மரபுகளை எல்லாம் மீறி மயானத்துக்கு வந்து சிவகுமாரனுக்குத் தம் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். வடமாகாணத்திலேயே அவனது இறுதி அஞ்சலிக்கு வந்த கூட்டம்போல், யாருக்கும் அதுவரை கூடவில்லை. அம் மாவீரன் சிவகுமாரன் தன் சாவிலும் கூட சரித்திரம் படைத்துச் சென்றான்.

அந்தத் தியாக மறவனின் எண்ணங்களை நடைமுறைப்படுத்தி அவனது கனவுகளை நனவாக்கியதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான். அவன் துரையப்பாவின் மீதும் நடராசாவின் மீதும் வைத்த குறி தவறினாலும் விடுதலைப் புலிகள் அவன் நினைத்தவற்றைச் செய்து முடித்தனர்.

## நீரடி நீச்சல் படையணியின்...

குழுக்களாக உள்ளபோதும் இவர்கள் அனைவரும் சாதாரண நீரடிச் சுழியோடிகளாகவும் செயற்படுகின்றனர். இவ்வாறான விசேட படையணியிலுள்ள உறுப்பினர்களைத் 'தவளை மனிதர்கள்' (frogmen) என அழைப்பார்கள். மேலே உள்ள இவ் விசேட படையணிகளது செயற்பாடானது, 2ஆம் உலக மாகாயுத்தத்தின் வெற்றியைத் தீர்மானித்ததும் இதுவரை உலகில் இடம்பெற்றவற்றில் பாரிய கடல்தரையிறக்க நடவடிக்கையானதுமான 'நோர்மண்டி தரையிறக்கத்தில்' நேச நாட்டுப் படையணிகளாலும்: அதன் பின்னர் இடம்பெற்ற பனிப்போர்க் காலத்திலும்: 1980இன் ஆரம்பங்களில் இடம்பெற்ற வளைகுடா யுத்தம், போக்லண்ட் யுத்தம் ஆகியவற்றிலும்: 1990 களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற 'பாலைவனப் புயல்' நடவடிக்கைகளிலும் மாபெரும் வியக்கத்தக்க சாதனைகளைப்புரிந்தன. இப் பிரிவினர் தமது பிரதான இடுபணியை நிறைவேற்றுவதன் பொருட்டு நீரடி தகர்ப்புக் குழுக்களை (Underwater Demolition Teams- UDT) எனும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவர்களது மேலதிக பணிகளாக - எதிரிகளாலற தமது பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படும் தரையிறக்க நடவடிக்கைகளின் போது, அவற்றை முறியடிக்கக் கரையோரப் பிரதேசங்களில் ஊடுருவிப் புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்தல்: எதிரிகளின் கப்பலணிகளின் பின்னால் தொடர்ந்து சென்று எதிரியின்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டம் சிந்திய இரத்தக்கனிகள்

போராட்டத்தில் ஏற்படும் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் பின்னல் ஒரு இரத்த காவியம் நிலவிக் கொண்டே இருக்கிறது. இளமையான இனிமையான வாழ்க்கைப் பருவத்தையுடைய எம் தோழர்கள், தோழிகள் ஒவ்வொருவரினதும் திரங்களும், தற்கொடைகளுமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உறுதியான படிக்கற்களாகும். இன்றுள்ள போரட்டத்தின் அதியுன்னத வளர்ச்சிப்-பாதையில் நின்று நாம் ஏறிவந்த கடினமான, கரடு-முரடான பாதையை திரும்பிப்-பார்க்கும்போது எம்முடன் ஒன்றாகவந்த பல உயிர்களைக்காணவில்லை. எம்-முயிரிலும் இனிய மக்கள், எமக்குயிரான எம் தோழர்கள், தோழிகள் என்று நிறைய-உயிரகளை இழந்து விட்டோம். இவர்களை சதம் அழித்துத் தேடும் போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் உயிரின் ஒளியாகிய தமிழீழ இலட்சிய-தீபத்தில் அவர்களைப் பார்க்-கிறோம். எம்முயிர் தோழர்-களையும், தோழிகளையும் நாம் நிச்சயமாக சென்றடை-வோம் என்பதில் எதுவித-ஐயமும் இல்லை. அப்போது நாம் மானசீகமாக, ஆத்ம-ரீதியாக ஒன்றை உணர்ந்தி-ருப்போம், எம்மக்கள்விடுதலை அடைந்து விட்டார்கள் என்று. கடந்த19-04-95ல் இருந்து வீரச்சாவடைந்த எம் தோழர்களுக்கும் , தோழிகளுக்காகவும் சிரம்தாழ்த்தி......

| நாள் | இயக்கப் | பெயர் | இயற் பெயர் | சொந்த இடம் | வீரச்சாவடைந்த சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|
| 19/04/95 | மேஜர் | தணிகை மாறன் | | கட்டைக்காடு | திருமலையில் கடற்படை கப்பல் தகர்ப்பின்போது |
| 19/04/95 | மேஜர் | கதிரவன் | | பரந்தன் | திருமலையில் கடற்படை கப்பல் தகர்ப்பின்போது |
| 19/04/95 | மேஜர் | மதிசா | | குச்சவெளி | திருமலையில் கடற்படை கப்பல் தகர்ப்பின்போது |
| 19/04/95 | கப்டன் | சாந்தா | | புங்குடுதீவு | திருமலையில் கடற்படை கப்பல் தகர்ப்பின்போது |
| 20/04/95 | மேஜர் | கிருபா | ஆனந்தவேல் ஜெயலட்சுமி | வல்வெட்டித்துறை | யாழ்மாவட்டத்தில்ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 22/04/95 | மேஜர் | அச்சுதன் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | லெப்டினன் | கண்ணதாஸ் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | லெப்டினன் | சிவம் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | லெப்டினன் | ராஜேந்திரம் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | லெப்டினன் | சபிலதாஸ் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | 2ம். லெப். | சிவராஜ் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | 2ம். லெப். | இலக்கியன் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | தனபாலசிங்கம் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | தனபாலநிங்கம் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | ஈழவருமன் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | மாவேந்தன் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | ஜேசு | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | ஞானமூர்த்தி | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 22/04/95 | வீரவேங்கை | இசைவாணன் | | | மட்டக்களப்பு, கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பின்போது |
| 27/04/95 | 2ம். லெப். | சுப்பிரமணியம் | | வவுனியா | வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்துடனான மோதலில் |
| 27/04/95 | வீரவேங்கை | அருளம்பலம் ஆத்துமுத்து | | வவுனியா | வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்துடனான மோதலில் |
| 01/05/95 | லெப்டினன் | சிங்காரம் | சுந்தரராஜா- ஜெயகுமார் | கிளிநொச்சி | வவுனியா பூவரசங்குளத்தில் நடைபெற்ற நேரடிமோதலில் |
| 01/05/95 | வீரவேங்கை | தவப்புதல்வன் | சுப்பிரமணியம்- நந்தகுமார் | 7ம் வட்டாரம் பு | முல்லைத்தீவில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் |
| 06/05/95 | வீரவேங்கை | சுடரோன் | ராமசாமி- பகீரதன் | யாழ்ப்பாணம் | திருமலை கும்புறுப்பிட்டியில் நேரடி மோதலில் |
| 11/05/95 | வீரவேங்கை | வீரமாணிக்கம் | புகழேந்திரன்- பகீரதன் | உருத்திரபுரம் கி | அனுராதபுரம் பழம்புளியங்குளம் பொலிஸ் முகாம் தரா்ப்பின்போது |
| 12/05/95 | லெப்டினன் | சங்கிலியன் | | அம்பாறை | யாழ்ப்பாணம் கட்டுவனில் இராணுவத்துடனான மோதலில் |
| 12/05/95 | 2ம் லெப். | கருணைதாசன் | | அம்பாறை | யாழ்ப்பாணம் கட்டுவனில் இராணுவத்துடனான மோதலில் |
| 12/05/95 | வீரவேங்கை | சாந்தகுமார் | | அம்பாறை | யாழ்ப்பாணம் கட்டுவனில் இராணுவத்துடனான மோதலில் |
| 12/05/95 | 2ம். லெப். | வேலவன் | சபாநாயகம்- அருளம்பலம் | மட்டக்களப்பு | வாழைச்சேனையில் முகாம் முற்றுகையின்போது ஏற்பட்ட மோதலில் |
| 13/05/95 | கப்டன் | வேங்கையன் | இராசையா- திவாகரன் | யாழ்ப்பாணம் | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | லெப்டினன் | ஜெயந்தன் | மகாலிங்கம்- விக்னேஸ்வரன் | திருமலை | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | லெப்டினன் | கருங்கதிர் | ஏகாம்பரம்- முத்துலிங்கம் | மட்டக்களப்பு | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | லெப்டினன் | யுகந்தன் | கந்தசாமி- கரிகரன் | கிளிநொச்சி | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | லெப்டினன் | சுமணன் | தம்பிப்பிள்ளை- முரளி | மட்டக்களப்பு | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | லெப்டினன் | தர்மராசா | முத்துக்குமார்- சிவகுரு | வவுனியா | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டம் சிந்திய இரத்தக்கனிகள்...

| நாள் | | இயக்கப் பெயர் | இயற் பெயர் | சொந்த இடம் | வீரச்சாவடைந்த சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|
| 13/05/95 | வீரவேங்கை | நவநீதன் | பாலசுந்தரம்– தாசன் | யாழ்ப்பாணம் | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | வீரவேங்கை | அகிலன் | கந்தசாமி– தீபன் | யாழ்ப்பாணம் | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | வீரவேங்கை | மணியரசன் | துரைராசா– ரூபன் | யாம்ப்பாணம் | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | வீரவேங்கை | இராஜபாரதி | விஜயரெத்தினம்-கேந்திரமாறன் | முல்லைத்தீவு | வன்னி செட்டிமலையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் |
| 13/05/95 | மேஜர் | குகன் | சற்குணராசா | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | லெப்டினன் | சபேசன் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | லெப்டினன் | சபாபதி | | அம்பாறை | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | லெப்டினன் | நாதன் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | வீரவேங்கை | சுப்பிரமணியம் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | வீரவேங்கை | நேசன் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | வீரவேங்கை | லோகிதராசா | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 13/05/95 | வீரவேங்கை | விக்கினேஸ்வரன் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் படைநகர்வு முறியடிப்பின்போது |
| 14/05/95 | மேஜர் | காளி | கந்தசாமி– மனோகரன் | பூநகரி | மன்னாரில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 14/05/95 | கப்டன் | பூங்காவனம் | ராமசாமி –ராஜ்குமார் | சிலாபத்துறை | மன்னாரில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 14/05/95 | லெப்டினன் | வயிரமுத்து | | அம்பாறை | ஆனையிறவு காவலறன் மீதான தாக்கதலின்போது |
| 14/05/95 | 2ம். லெப். | தீபன் | | அம்பாறை | மன்னாரில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | கப்டன் | சிவரஞ்சன் | திருச்செல்வம்–சிவநாதன் | மட்டக்களப்பு | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | கப்டன் | ஜெகன் | | மட்டக்களப்பு | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | வீரவேங்கை | கதிரவன் | தியாகலிங்கம்–அழகுராசா | திருமலை | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | வீரவேங்கை | உதிரன் | புனிதன் | மட்டக்களப்பு | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | வீரவேங்கை | தமிழ் வண்ணன் | சந்திரசேகரம்–தெய்வேந்திரன் | திருமலை | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | வீரவேங்கை | தமிழரசன் | கனகரத்தினம்– இன்பகுமார் | மட்டக்களப்பு | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 16/05/95 | வீரவேங்கை | பிராணவன் | மரியதாஸ் | மட்டக்களப்பு | திருமலை கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 19/05/95 | கப்டன் | ராமு | செபஸ்தியாம்பிள்ளை– பிரகாசம் | யாழ்ப்பாணம் | ஆனைமிறவு முகாமிலிருந்து இராணுவம் வெளியேறமுற்பட்டபோது |
| 19/05/95 | லெப்டினன் | சுரேஷ்குமார் | ராமசாமி– தவமூர்த்தி | மன்னார் | மன்னாரில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 21/05/95 | லெப்டினன் | சுந்தா | நடராசா– உதயகுமார் | கிளிநொச்சி | திருகோணமலை புல்மோட்டையில் நேரடி மோதலில் |
| 22/05/95 | வீரவேங்கை | சிற்றமுதன் | வையாபுரி– மூர்த்தி | கிளிநொச்சி | வன்னி மாவட்டத்தில் இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் |
| 22/05/95 | 2ம். லெப். | திருலோகேஸ்வரன் | கந்தசாமி– கோமகன் | மட்டக்களப்பு | பனிச்சங்கேணியில் விசேட அதிரடிப்படையினருடனான மோதலில் |
| 22/05/95 | 2ம். லெப். | சுரெஸ்குமார் | கனகரத்தினம்– கருணாகரன் | மட்டக்களப்பு | பனிச்சங்கேணியில் விசேட அதிரடிப்படையினருடனான மோதலில் |
| 22/05/95 | வீரவேங்கை | குலத்துங்கன் | கதிரமலை– குலம் | மட்டக்களப்பு | பனிச்சங்கேணியில் விசேட அதிரடிப்படையினருடனான மோதலில் |
| 24/05/95 | கப்டன் | சூரியகுமார் | நல்லையா– சத்தியசீலன் | கண்டி | மட்டக்களப்பு காட்டுப்புறத்தில் நடைபெற்ற மோதலில் |
| 24/05/95 | 2ம். லெப். | ரீகசுந்தரம் | பாலகிருஸ்ணன்– நமசீலன் | மட்டககளப்பு | மட்டக்களப்பு காட்டுப்புறத்தில் நடைபெற்ற மோதலில் |
| 24/05/95 | வீரவேங்கை | பரமயோகி | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு காட்டுப்புறத்தில் நடைபெற்ற மோதலில் |
| 24/05/95 | வீரவேங்கை | ஜெயானந்நன் | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு காட்டுப்புறத்தில் நடைபெற்ற மோதலில் |
| 26/05/95 | 2ம். லெப். | தாமரா | மேரி சஞ்சயா | மன்னார் | மன்னாரில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 26/05/95 | வீரவேங்கை | சுமதி | விமலாதேவி– சின்னராசா | யாழ்ப்பாணம் | மன்னாரில் ஏற்பட்ட நேரடி மோதலில் |
| 27/05/95 | லெப். கேணல் | அசுரன் (முல்லை மாவட்டத் துணைத்தளபதி) | ராமசாமி –ராமச்சந்திரன் | மடு–மன்னார் | மணலாறு காட்டுப்பகுதியில் நேரடி மோதலில் |
| 27/05/95 | மேஜர் | கோமகன் | அந்தோனிப்பிள்ளை– யோகராசா | மட்டக்களப்பு | மணலாறு காட்டுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் |
| 27/06/95 | லெப்டினன் | செவ்வண்ணன் | அழகையர்– சிவசங்கர் | மட்டக்களப்பு | மணலாறு காட்டுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் |
| 27/05/95 | லெப்டினன் | இளந்தமிழன் | சூரியா | மட்டக்களப்பு | மணலாறு காட்டுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் |
| 27/05/95 | லெப்டினன் | மதன் | மகேசன்–திவாகர் | மட்டக்களப்பு | மணலாறு காட்டுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் |
| 27/05/95 | 2ம் லெப். | முல்லைச்செல்வம் | கணேசர்–நல்லகுமார் | முல்லைத்தீவு | மணலாறு காட்டுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் |
| 28/05/95 | லெப்.கேணல் | வினோதன் | | | மட்டக்களப்பு தரவைக்குளம் இராணுவமுகாம் தாக்கியழிப்பில் |

(இவருடன் வீரச்சாவடைந்த 16 போராளிகளினதும் விபரங்கள் பின்னர் தரப்படும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகெங்கும் மாபெரும் ஊர்வலங்கள்

## புரிந்திடுவாய் சிங்களமே!

தூது சென்ற வெண்புறாவும் துண்டிக்கப்பட்டு எங்கள்
பாதுகாப்பைத் தேடிவந்து படலையிலே வீழ்ந்தடா!
மேதினிக்கு முன்னால் நீ மொட்டாக்குடனமர்ந்து
காதினிக்கப் பேசிக் கதைப்பதெல்லாம் கேட்குதடா!
தீர்வுக்குள் வைத்த தின்பண்டம் என்னவென்று
பார்வைக்குத் தெரியப் பலநாள் எடுக்கவில்லை!
தீவுக்குள் நம்மினத்தைத் தீர்த்து விடலாமென்று
நாவுக்குள் முணுமுணுத்து நடக்கின்றோம் நாறிவோம்!

போகும் பொருள்களுக்குப் பெருந்தடைகள் போட்டுவிட்டுச்
சாகட்டும் தமிழனென்று சங்கற்பம் பூண்டவன் நீ!
காகிதத்தை விரித்துக் கண்ணெதிரே காட்விட்டு
ஏகிவிட்டாய் உலகவலம் எடுத்துவர ஆயுதங்கள்.

கூலிப்போர் செய்யக் குரங்குகளைத் திரட்டுகின்றாய்!
காலிப்பையோடு கடன்கேட்க ஓடுகின்றாய்!
பிச்சா பாத்திரத்தை எறிந்துவிட்டுப் பிக்குகளும்
கைச்சாத்திடுவதாய்க் கதைகள் பிறக்கிறது!

உலகப் படைகளுடன் ஓரினத்தையழிப்பதற்கு
உலகென்ன உன்னைப்போல் அரக்கர்கள் பொதுச் சொத்தா?
சிலகைக்கூலிகளின் சிற்றடிகள் வருடுவதால்
உலகத் தமிழனுக்கு உலைவைத்தல் சுலபமில்லை!

ஆள்கூட்டி வந்தெம்மை அழித்திட நாமென்ன
அந்நியர் நிலத்திலா ஆர்ப்பாட்டம் செய்கின்றோம்?
ஆள்வாரைத் துரத்தி ஆட்சி கவிழ்த்தோமா?
அகிலத்தை அழிக்க அணுக்குண்டு விற்றோமா?

என்ன குற்றம் செய்தோம்? எமை உலகம் தண்டிக்க!
எவனுக்குரிமையுண்டு எம்முரிமை கண்டிக்க!
சின்னப் பெடியனென்று சிறீலங்கா கூறுவதை
இன்னும் நம்புகின்ற இழிச்சவாயன் எத்தனை பேர்?

ஓ! உலகத் தமிழரெல்லாம் ஒன்றாகக்கூடியிங்கு
ஊர்வலமாய் வந்துண்மை உலகுக்கு உரைத்திடுவாய்
புரிந்திடுவாய் சிங்களமே! தெரிந்திடுவாய் எங்களமே!
பூவுலகம் பொய்யர் புலுகில் மயங்காது!

ஓ! உலகத் தமிழரெல்லாம் ஒன்றாகக் கூடிவிட்டார்
ஓ! உலகத் தமிழரெல்லாம் ஒன்றாகக் கூடிவிட்டார்
ஓ! உலகத் தமிழரெல்லாம் ஒன்றாகக் கூடிவிட்டார்

புலவர் சிவநாதன்

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப்புலிகளையும் அங்கீகரிக்கக் கோரியும் மேற்குலகின் ஆயுதம் வழங்கும் நிலைப்பாட்டைக் கண்டித்தும் தமிழ் மக்கள் ஒன்று திரள்கிறார்கள்...**

## ஊர்வல ஒழுங்கு விபரம்

**டென்மார்க்**
02 - 06 - 1995
வெள்ளிக்கிழமை
மாலை 4 மணி
கொபனேகன்
மாநகரசபை முன்றலில்

**ஜேர்மனி**
03 - 06 - 1995
சனிக்கிழமை
காலை 9 மணி
Munster Str -138-140
44145 Dortmund
GERMANY

**கனடா**
05 - 06 - 1995
திங்கள்
காலை 10 மணி
தலைநகர் OTTAWA
பாராளுமன்ற
முன்றலில்
*Toronto விலும்
நடைபெறவுள்ளது

**சுவிஸ்**
12 - 06 - 1995
திங்கள்
பி.ப. 2.30 மணி
Burgliplaiz
ZURICH

**நோர்வே**
06 - 06 - 1995
செவ்வாய்
காலை 7 மணி
JERMBANETORGET
OSLO

**பிரான்ஸ்**
10 - 06 - 1995
சனிக்கிழமை
மாலை 3 மணி
Place de La Republique
75010 - PARIS
FRANCE

**அண்மையில் தமிழ் மக்களின், விடுதலைப் போராட்டத்தை மேற்குலகம் கண்டித்ததை, பின்னணிகளை ஆராயாமல், சிறீலங்கா அரசின் ஒருதலைப்பட்சமான செய்திகளின் வெளிப்பாடு என்பதனை வலியுறுத்தி தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் ஏகோபித்த ஒரே இயக்கம் விடுதலைப் புலிகளே! எமது தலைவன் பிரபாகரனே! என்று உலகெலாம் அறியவைக்க உலகத் தமிழினமே ஒன்று கூடுவாய்.**




பயண ஒழுங்குகள்

லண்டனில்
மாபெரும் ஊர்வலம்
03 - 06 - 1995, Saturday, 2.30 p.m.




பகல் 12.30 மணிக்கு பஸ் வண்டிகள் புறப்படும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெருப்புக் குளித்து நிலாவரையில் விழுந்தது அந்தக் கறுப்புப் பறவை

அகதியென்றால்... தமிழனென்று
உலகமெங்கும் அறியப்பட்டவனே !
கள்ளத் தோணியென்றால்
அவன் தமிழனென்று
சொல்லப்பட்டவனே!
வையப்பரப்பெங்கும் ஆறுகோடி பேரிருந்தும்
உய்யவொரு நாடின்றி உழல்பவனே
நேற்றுவரை
கைகட்டி நில்லென்றால்
வாயும் பொத்தி வணங்கிக் கொண்டாய்
கடிக்க வந்த நாயைக் கூட
அடித்துத்துரத்தப் பலமற்று அழுதாய்
அமாவாசைக்கு அடுத்து வந்த மூன்றாம்-
நாள்
பிறை நிலவு பார்க்க மட்டும்
தலையை நிமிர்த்திய தமிழனே !
'கங்கை கொண்டான்
கடாரம் வென்றான்'
என்றெல்லாம் முழங்கிவிட்டு
நீ என்ன செய்தாய் ?
பொல்காவலையிலும்
புறக்கோட்டைத் தெருவிலும்
புகையிலைக் கடைபோட்டாய்
கரைப்பாதை வழியாகக் கதிர்காமம் -
போனாய்.
நவராத்திரி நாட்களில் மட்டும்
உனக்கு வீரம் பிறக்கும்
'மானம்பூ' அன்று மானம் தலைகாட்டும்
வாழையொன்றைக் கட்டிவைத்து
வெட்டுவாய்
குருதியென்று குங்குமத்தைத்
தடவிவிட்டுக்
குளிர்ந்து போய்விடுவாய்.
ஆகாய ஊர்தியை அண்ணார்ந்து பார்த்து
ஆச்சரியப்பட்டாய்.
வியத்நாமில் விழுந்துகிடந்த
அமெரிக்க விமானத்தைப் பார்த்து
கூத்தாடிக் குதூகலித்தவனே
ஆப்கானிஸ்தானில் சுட்டு வீழ்த்திய
சோவியத்து விமானத்தைப் பார்த்து
சொல்லமுடியாத மகிழ்ச்சியில்
துள்ளியவனே
வாயைத்திறந்த போதெல்லாம் சோறுண்டு
பாயைக் கண்ட இடமெல்லாம்
படுத்துங்கியவனே
உன் பரம்பரைக்கு வீரம் பிறந்தது.
நேற்றெம் தலைக்கு மேலே
உன் இளவல்கள் சரித்திரம் எழுதினர்.
வில்லோடும், வேலோடும்
வீரத்தின் வாளோடும்
மல்லாடிய தமிழனின் மரபுளோன் ஒருவன்
எதிரி விமானத்துக்கு குறிவைத்து எறிந்தான்.
நெருப்புக்குளித்து நிலாவரையில் விழுந்தது
அந்தக் கறுப்புப் பறவை.

சுட்டுப் பொசுக்கிய சுடலைக்குருவிக்கு
'அவ்ரோ' என்றொரு அழகான பெயர்.
'விக்டோரியாமகாராணி' வீட்டுக்குழந்தையிது.
வெள்ளைக்காரனிடம் வாங்கிய கள்ளக்கோழி.
இது செய்த கொடூரம் எத்தனையென்பதை
பழைய நாட்களைத் திருப்பினால் தெரியவரும்.
உலகத்தின் யுத்த தர்மங்களை ஒதுக்கிவிட்டு
மணக்கும் மலம் சுமந்து வந்து
எம் மண்ணில் போட்ட 'புண்ணியவான்'
பீயைக் கரைத்துப் பீப்பாவில் போட்டடைத்து
கோட்டையைச் சுற்றிக் கொட்டிய 'குணசீலன்'
இது பயணிகள் ஊர்தியல்ல...
பாவிகளைச் சுமந்த விமானப்பல்லக்கு.



எண்பது வயதிலும் இன்னுமிருக்கின்ற
'போரென்றால் போரென்ற' பெரியகிழவன்
ஜே.ஆர் ஜெயவர்த்தனாவைத் தட்டியெழுப்பி
நிலாவரைக்கு வந்து நிகழ்ந்ததைப் பார்க்கச்
சொல்லவும் !
பிரபாகரன் நெருப்பாற்றைக் கடப்பதை
'கிழட்டுநரிக்கு' நினைவு படுத்தவும்.
'காற்சட்டை போட்டுள்ள
சிலநூறு பொடியளின் 'லீடர்' என்று
ஆத்திரப்பட்ட 'டிற்சித்'துக்கு அறிவிக்கவும்.
எங்கிருந்தாலும் ஒருதடவை இங்குவரட்டும்.
வான்பரப்பு எங்கள் வசமாச்சு என்பதை
சூத்திரதாரி தெரிந்து கொள்ளட்டும்.
'முதலைக் ஹெலியோடு' முன்னர் வந்திறங்கிய
இந்தியப் படைகளுக்கும் இதனைச்சொல்லவும்
கேட்டுக் குலை நடுங்கட்டும்.
விழுந்தது விமானம் மட்டுமா?
இல்லையே
எந்தத் தாக்குதல்களுக்கும்
ஈடுகொடுக்குமென நம்பிய
அஸ்திரங்களுமல்லவா அழிந்து போயின.
விரிந்து வைத்திருந்த வியூகங்களும்
எரிந்து போயின.
மிஸ்சில் குமாரரணதுங்கவுக்கு
முத்து முத்தாய் வியர்வையூத்து முகம்
சிவந்ததாம்.
நாங்கள் என்ன செய்யலாம்.
அரசாட்சியை முசுப்பாத்தியாகக் கருதினால்
அவ்ரோ மட்டுமல்ல......
அரியாசனமும் கவிழ்ந்து போகும்.
புத்தகோவிலில் பிராத்தனையை முடித்துவிட்டு
'பெரியகிழவி' என்ன கூறினார்.
'புலிகளை நம்பக்கூடாதாம்'
நல்லது.
ஆச்சிக்கு அறளை பெயர்ந்துவிட்டது.
தாயும் மகளும் சேர்ந்து
தாயம் எறிகின்றனர்.
காயை நகர்த்துவதில் தான்
கவனமெடுப்பதில்லை.
அடக்கும் இனத்துக்கு
துரோகமெனப்படுவது
அடக்கப்படும் இனத்துக்கு
தியாகமெனப்படும்.
நம்பிக்கையென்பது
ஆச்சி நினைப்பது போல
விட்டுக்கொடுப்பது அல்ல...
சோடிப்பறவைகள் தீயில் எரிந்துபோயின
மீதிப் பறவைகளைக் காணமுடியவில்லை
ஒன்றிரண்டையாவது உலாவவிடுங்கள்
எரிந்து விழுந்ததை எல்லோரும்
பார்க்கவில்லை.
மீதிப்பேரும் காண மிகுந்த ஆவல்
ஒன்றையாவது அனுப்பி வைக்கவும்
எல்லோரும் பார்க்க எரிந்து விழட்டும்
'சுப்பசொனிக்' வந்தால் சுதியாய்
இருக்கும்.
வானம் வெறிச்சோடிக் கிடக்கிறது.
சத்தம் இல்லாததால் நித்திரை
வரவில்லை.
குண்டு விமானத்தை வானத்தில்
வரவிடவும்
எது வந்தாலும்
இனிச் சங்கரித்தல் எங்கள் தொழில்
நிலமும் கடலும் நேற்றெம் வசமானது
நிலவானமும் இன்று கைகளிற்கிட்டியது
பகைவன்
சுடுபுழுங்கல் அள்ளிய காகம் போல
அங்கும் இங்கும் அலைகின்றான்.
ஈழத்தமிழனே !
இனியுன் எதிர்காலம்
ஒளிமயமானது.

— புதுவை இரத்தினதுரை —

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 6224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்